www.padippakam.com

ஜெயமோகன்
சாரு நிவேதிதா
காலச்சுவடு
சுகுமாரன்
உயிரோசை
சோல்சனிட்சின்

# இலக்கிய மொக்கைகள்

வினவு

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய மொக்கைகள்!

புதிய கலாச்சாரம்
வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

*நூல்:*

இலக்கிய மொக்கைகள்

*ஆசிரியர்:*

வினவு

http://vinavu.wordpress.com

vinavu@gmail.com

*முதற்பதிப்பு:*

ஜனவரி 2009

*வெளியிடுவோர்:*

புதிய கலாச்சாரம்

சென்னை - 83.

*கிடைக்குமிடங்கள்:*

இரா. சீனிவாசன்,

புதிய கலாச்சாரம்,

16, முல்லை நகர் வணிக வளாகம், 2ஆவது நிழற்சாலை,

(15-ஆவது தெரு அருகில்), அசோக் நகர்,

சென்னை - 600 083.

தொலைபேசி: 044 - 2371 8706, செல்பேசி : 99411 75876

கீழைக்காற்று வெளியீட்டகம்,

10, அவுலியா தெரு, எல்லீசு சாலை,

சென்னை - 600 002.

தொலைபேசி: 044 - 28412367

*விலை:* ரூ. **25.00**

படிப்பகம்

www.padippakam.com

## பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 4 |
| கேழ்வரகில் வடிகின்றது நெய்!<br>கருத்துரிமைக்காகப் போராடுகின்றது காலச்சுவடு!! | 5 |
| கவிஞர் சுகுமாரன் நினைவில்<br>காரல் மார்க்ஸ்! | 15 |
| பாரு நிவேதிதா -<br>சுயமோகன் ஒரு லடாய்! | 24 |
| நவ்வாப்பழம்:<br>ஜெயமோகனுடன் ஒரு தத்துவ விசாரம்! | 30 |
| மொக்கைப் பதிவு உடல்நலத்திற்குக் கேடு! | 38 |
| சோல்சனிட்சின்:<br>'அவலத்தில்' பிறந்த இலக்கிய அத்வானி | 44 |


படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

சிறு பத்திரிகை உலகம் என்று அறியப்படும் இலக்கியவாதிகளின் உலகம் சில்லறைச் சச்சரவுகளாலும் குழாயடிச் சண்டைகளாலும்தான் தன்னை உயிர்ப்புடன் பராமரித்துக் கொள்கிறது. சும்மாவே சொறிந்து சுகம் காண்பவன் கையில் ஒரு விசிறிக் காம்பு கிடைத்ததைப் போல இந்த இலக்கியவாதிகளுக்கு இப்போது இணையம் கிடைத்திருக்கிறது. முன்பெல்லாம் டீக்கடைகளிலும், மதுக்கடைகளிலும், இலக்கியக் கூட்டங்களிலும் மட்டுமே நடைபெற்று வந்த வாய்க்கலப்புகளும் கைகலப்புகளும் இப்போது இணையத்துக்கும் இடம் பெயர்ந்திருக்கின்றன..

எனவே, அற்பவாதம், தனிநபர்வாதம் இந்தக் கண்ணோட்டங்களின் அடிப்படையிலான கம்யூனிச எதிர்ப்பு ஆகியவற்றுக்கும் இணையம் இன்று தளம் அமைத்துக் கொடுத்திருக்கிறது. இந்தத் தளத்தில் இவர்களை எதிர்த்துப் போராடவும், புரட்சிக்கும் சமூக மாற்றத்திற்கும் குரல் கொடுக்கவும் பல இளைஞர்கள் உருவாகியிருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சியளிக்கும் செய்தி. சமூக அக்கறையும், பொறுப்புணர்ச்சியும் துறைசார்ந்த அறிவும் கொண்ட இந்தப் புதிய எழுத்தாளர்களிடம் மேற்கூறிய இலக்கியவாதிகளுக்கே உரிய சில்லறைத்தனங்கள் இல்லை.

அந்த வகையில் வினவு தளத்தில் இலக்கிய அற்பவாதிகளை அடையாளம் காட்டும் வகையில் வெளியான கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம் பெறுகின்றன. ஸ்டாலின் எதிர்ப்பு என்று தொடங்கி கம்யூனிச எதிர்ப்பின் இலக்கிய ஆயுதமாக ஏகாதிபத்தியங்களால் பயன்படுத்தப்பட்ட சோல்சனிட்சினைப் பற்றி புதிய கலாச்சாரம் இதழில் வெளியான கட்டுரையும் பொருத்தம் கருதி இத்தொகுப்பில் இடம் பெறுகிறது.

வலை உலகத்துடன் தொடர்பில்லாத வாசகர்களுக்கு சில கட்டுரைகளில் இடம்பெற்றுள்ள சில சொற்கள் புதியனவாக இருக்கக் கூடும். சற்றே முயன்றால் அவற்றைப் புரிந்து கொள்ள இயலும்.

தோழமையுடன்
ஆசிரியர் குழு,
புதிய கலாச்சாரம்.
ஜனவரி 2009



படிப்பகம்

www.padippakam.com

# கேழ்வரகில் வடிகின்றது நெய்! கருத்துரிமைக்காகப் போராடுகின்றது காலச்சுவடு!!

"குடிமைச் சமூகத்திற்கு அரசியல் சாசனம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகள் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வரும் சூழலில் அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் விவாதத்தை உருவாக்கவும் - கருத்துரிமையும் வாழ்வுரிமையும் - என்னும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்றினை 14.06.08 அன்று சென்னையில் நடத்தியது காலச்சுவடு'' - இது காலச்சுவடில் வெளிவந்த விளம்பரம். இக்கருத்தரங்கில் தியாகு, கிருஷ்ணானந்த், சதானந்த மேனன், பேராசிரியர் கல்யாணி, இன்குலாப், பா.செயப்பிரகாசம், இராசேந்திர சோழன், ஓவியா, அனிருத்தன் வாசுதேவன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

திடீரென்று கருத்துரிமையின் பால் காலச்சுவடுக்கு காதல் வந்த மர்மம் என்ன? 2003-ஆம் ஆண்டிலிருந்து நூலகத்துறை சிறு அளவில் காலச்சுவடை வாங்கி வந்ததாம். 2006-ஆம் ஆண்டிலிருந்து தி.மு.க ஆட்சியேற்ற பின் 1500 பிரதிகள் வாங்கப்பட்டனவாம். இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஒரு வாய்மொழி உத்தரவின் மூலம் காலச்சுவடு வாங்குவது நிறுத்தப்பட்டதாம். உடனே கருத்துரிமைக்கு ஆபத்து வந்து விட்டதெனக் களத்தில் இறங்கிவிட்டது காலச்சுவடு.

நூலகத்துறை வாங்கியபோது சுமார் ஏழாயிரம் பிரதிகள் அச்சடித்த காலச்சுவடு தற்போது ஐந்தாயிரம் பிரதிகள் மட்டும் வெளியிடுகிறார்கள் என்று கருதுகிறோம். இதழ் வாங்குவது நிறுத்தப்பட்டதால் ஏதோ தமிழகத்திற்கு மாபெரும் ஆபத்து வந்துவிட்டதாகக் காலச்சுவடு பதறுகின்றது. அந்தப் பதற்றத்தில் கருத்துரிமைக்குக்



படிப்பகம்

www.padippakam.com

கல்லறை கட்டப்பட்டதாக எண்ணுவதை என்னவென்று சொல்ல? தமிழகத்தின் பண்பாடு, கல்வி, அறிவு அத்தனைக்கும் தான்தான் அத்தாரிட்டி என்று ஒரு ஆதீனத்தின் மனநிலையில் காலச்சுவடு இருப்பதுதான் இந்தப் பதற்றத்திற்கு காரணம்.

நூலகத்துறை வாங்கி நிறுத்திய விவகாரத்தை ''காலச்சுவடுக்கு தடை'' என்ற சொல்லாடல் மூலமாக ஒரு மாபெரும் போராட்ட மாகக் காலச்சுவடு முன்னெடுத்திருக்கின்றது. இதற்காக பல இந்திய எழுத்தாளர்கள், தமிழ் எழுத்தாளர்கள், த.மு.எ.ச, கலை இலக்கியப் பெருமன்றம் என அனைவரும் காலச்சுவடுக்காகப் பரிந்துபேசி கடிதம் எழுதியிருக்கின்றார்கள். இந்தக் கடிதங்கள் அனைத்தும் ''கருத்து'' அமைப்பின் கார்த்தி சிதம்பரம், கனிமொழிக்கு அனுப்பப் பட்டிருக்கின்றதாம். நியாயமாக இந்தக் கடித வினைகள் நூல கத்துறை சார்ந்த அமைச்சருக்குத்தான் அனுப்பப்பட்டிருக்க வேண்டும். கருத்து அமைப்பிற்கு அனுப்ப வேண்டிய காரண மென்ன? உங்களுக்கோ, எனக்கோ ஒரு பிரச்சினை என்றால் போலீசில் புகார் கொடுப்போம், அல்லது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்போம். இதை விடுத்து தமிழகத்தின் மனித உரிமை மீறல்க ளுக்கு யாரும் கருத்து அமைப்பிடம் செல்வதில்லை. அது மேட்டுக் குடியின் பொழுதுபோக்கிற்காக உருவாக்கப்பட்ட வெற்று மனிதா பிமான அமைப்பு. கருத்துரிமைக்காக அது எதையும் பிடுங்கிய தில்லை. ஆனால் காலச்சுவடு இவர்களிடம் புகார் கொடுத்ததற்குக் காரணம் இந்த மேட்டுக்குடியின் குலக் கொழுந்துகளை வைத்து பல காரியங்கள் சாதித்திருப்பதுதான். நண்பர்களுக்கிடையிலான கருத்து வேறுபாட்டை பொது மேடைக்குக் கொண்டு வந்திருக்கின்றது காலச்சுவடு.

இந்தப் பிரச்சினை தொடர்பாக இதன் ஆசிரியர் கண்ணன் ஜூனியர் விகடனுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறு கின்றார், ''காலச்சுவடின் நடுநிலைமையை யாரும் சந்தேகப்பட முடியாது. பதிப்பகத்துறைக்கு முதல்வர் செய்திருக்கும் உதவி களைப் பாராட்டி தலையங்கம் எழுதினோம். மூன்றாவது பாலினத் தவர்களுக்கு நலவாரியம் தொடங்கியது, சென்னை சங்கமம் விழாவை நடத்தியது எனப் பாராட்டத்தக்க விசயங்களைப் பாரட் டினோம். அதே சமயம், கடந்த மே மாதம் மதுரையில் தினகரன் அலு வலகம் எரிக்கப்பட்டதைக் கண்டித்தும் தி.மு.க தரப்பை விமரிசித்து எழுதிய எழுத்தாளர் ஒருவருக்கு எதிராக தி.மு.க ஏற்பாடு செய்த கூட்டத்தையும் விமரிசித்தோம். கனிமொழியின் அணுசக்தி ஆதரவு உரையைப் பதிவுசெய்து, அதற்கு விமர்சனமாக வந்த வாசகர்



படிப்பகம்

www.padippakam.com

கடிதங்களையும் வெளியிட்டோம். குறிப்பாக செம்மொழி மையம் ஆரம்பிக்கப்படப் போவதாக அறிவிப்பு வந்தபோது, அதற்கு தலைவராக முதல்வர் கருணாநிதி இருந்தால், அரசியல் சார்பு என்பது போன்ற சர்ச்சைகள் வரும் என்று குறிப்பிட்டிருந்தோம். ஆனால், இதெல்லாம் ஆளும் தி.மு.க அரசுக்கு எரிச்சலை ஏற்படுத்தி விட்டதோ என்னவோ தற்போது காலச்சுவடு இதழ் நூலகங்களில் நிறுத்தப்பட்டிருக்கின்றது. எந்தக் காரணமும் சொல்லாமல் பத்திரிகைகள் மீது விரோதம் பாராட்டுவதை இந்த அரசு தொடர்ந்து செய்து வருகின்றது. தினகரன் பத்திரிகைக்குப் பல கோடி ரூபாய்க்கு விளம்பரம் கொடுத்தவர்கள், இப்போது அதை நிறுத்தி இருக்கிறார்கள். தேவைப்படும்போது வரம்பு மீறி வாரி வழங்குவதும், ஆகாத போது அரசு விளம்பரங்களைக் கொடுக்காமல் தவிக்க விடுவதும் அரசின் வாடிக்கையாகி விட்டது. அரசுக்கும் ஊடகங்களுக்கும் இடையே சட்ட ரீதியான நெறிமுறைகள் பிறப்பிக்கப்பட வேண்டும். மாற்றுக் கருத்துக்களைத் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவம் இல்லாததால் தான் அரசு இப்படி நடந்து கொள்கிறது.''

ஏதோ காலச்சுவடைப் பார்த்து தி.மு.க அரசு கதிகலங்கி பயம் பிதுங்கி நிற்பதைப் போல கண்ணன் பேசுகின்றார். தினகரன் அலுவலகத்தில் புகுந்து அடித்தவர்களுக்கு காலச்சுவடெல்லாம் எம் மாத்திரம்? உலகத் தமிழ் இதழ் என்ற அடைமொழியோடு காலச் சுவடு வருவதால் தன் தகுதியை மீறித் தன்னை மிகப்பெரிய அறிவுத்துறை ஆதினமாக கருதுவதுதான் நகைப்பிற்குரியது.

காலச்சுவடு நூலகங்களுக்கு வாங்கப்பட்டது நிறுத்தப்பட்ட உடன்தான் அரசின் மனப்பக்குவம் கண்ணனுக்குத் தெரிகின்றது. அ.தி.மு.க ஆட்சியில் முரசொலி நிறுத்தப்படுவதும், தி.மு.க ஆட்சியில் நமது எம்.ஜி.ஆர் நிறுத்தப்படுவதும் இங்கு காலங் காலமாக நடந்துவரும் நெறிமுறைதான். மற்றபடி தினத்தந்தி, தினமலர், தினமணி, இந்து, எக்ஸ்பிரஸ், வாரப் பத்திரிகைகள், வாரமிருப் பத்திரிகைகள் அனைத்தும் எப்போதும் வாங்கப் பட்டுதான் வருகின்றன. இவற்றில் அரசை விமரிசித்து செய்திகளோ, கட்டுரைகளோ வந்தால் அதற்காக நிறுத்தப்படுவதில்லை.

இதையே இந்தப் பிரச்சினை குறித்து கேட்டபோது அமைச்சர் தங்கம் தென்னரசுவும் (ஜூ.வி) கூறியிருக்கின்றார். ''தி.மு.க.வுக்கு எதிராக எத்தனையோ செய்திகளைக் காலச்சுவடு மட்டுமல்லாமல் பல இதழ்களும் இன்றைக்கும் வெளியிட்டுத்தான் வருகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

அதற்காகவெல்லாம் இதழை நிறுத்த வேண்டும் என்றால், அந்த இதழ்களையும்தானே நிறுத்தியிருக்க வேண்டும். வாசகர்கள் அதிக அளவில் படிக்கும் இதழ்களை நூலகங்களுக்கு வாங்கலாம் என்று தீர்மானித்து அதன் அடிப்படையில்தான் காலச்சுவடு பத்திரிகையை நிறுத்திவிட முடிவெடுத்திருக்கின்றார்கள். இது புரியாமல் அரசியல் காரணங்களுக்காக காலச்சுவடு நிறுத்தப்பட்டதாகத் திசை திருப்புகி றார்கள்.''

அமைச்சரின் இந்தக் கூற்றில் பாதிதான் உண்மை. அரசிற்கு ஆத ரவாக இருக்கும் பல அனாமதேயப் பத்திரிகைகள் நூலகத்திற்கு வாங் கப்படுவதும், அவைகளுக்கு விளம்பரம் வழங்கப்படுவதும், அந்த விளம்பரங்களுக்காகவே பல பத்திரிகைகள் 500, 1000 பிரதிகள் மட்டும் அச்சடிக்கப்படுவதும் எல்லா ஆட்சிகளிலும் நடக்கும் விசயம்தான்.

நாம் எழுப்பும் கேள்வி என்னவென்றால் காலச்சுவடைப் போல பல சிறு பத்திரிகைகள் மாதந்தோறும் வெளிவந்தாலும் காலச்சுவடு மட்டும் நூலக ஆணையைப் பெற்றதன் மர்மம் என்ன? காலச்சுவடு நூலகத்துறையால் நிறுத்தப்பட்டதை விட அது ஏன் வாங்கப்பட்டது என்பதைத்தான் அமைச்சரும், கண்ணனும் தெரிவிக்க வேண்டும். இதைத் தெரிந்து கொள்ள நமக்கு கருத்துரிமை இருக்கின்றதல்லவா?

அதேபோல பாசிசத்திற்கு பேர்போன புரட்சித் தலைவியின் ஆட்சியில் சிறு அளவில் காலச்சுவடை நூலகத்துறை வாங்கியதற்கு என்ன காரணமென்பதைக் கண்ணன் அறிவிக்கத் தயாரா? தி.மு.க. ஆட்சியில் 1500 படிகள் வாங்கப்பட்டதன் பின்னணி என்ன? முன்னது அதிகாரவர்க்கத்தின் சிபாரிசிலும் பின்னதில் கனிமொழியின் சிபாரி சும்தானே காரணம்? ஆக காலச்சுவடு நூலகத்துறைக்குள் நுழைந்த தற்கும் மற்ற அனாமதேயப் பத்திரிகைகள் நுழைந்ததற்கும் எந்த வேறுபாடுமில்லை.

இதை விடுத்து ஜெயலலிதாவும், கருணாநிதியும் வேலை மெனக்கெட்டு காலச்சுவடை வாங்குவதற்கு தீவிர முயற்சி எடுத் தார்களா என்ன? எல்லாம் பெரிய இடத்து தொடர்பும், சிபாரிசும், பழக்கமும்தானே வழி ஏற்படுத்திக் கொடுக்கின்றன. இதில் கருத்து ரிமைக்கு ஆபத்து எங்கே இருக்கின்றது? அணுசக்தி ஒப்பந்தம் குறித்த கனிமொழியின் பேச்சைக் காலச்சுவடு வெளியிட்டது ஐஸ் வைக்கத்தானே அன்றி வேறு என்ன காரணமிருக்கமுடியும்? அணு ஒப்பந்தம் குறித்தும் அதன் கேடுகள் பற்றியும் பல முன்னாள்



படிப்பகம்

www.padippakam.com

விஞ்ஞானிகள், அறிஞர்கள் காத்திரமான கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார்கள். அதையெல்லாம் விடுத்து மன்மோகன்

சிங்கிற்கு முதுகு சொறியும் தி.மு.க.வின் நிலைப்பாட்டைத் தனது முதல் உரையில் வாந்தியெடுத்த கனிமொழியின் பேச்சை அப்படியே வெளியிட்டதன் அரசியல் நோக்கமென்ன? எல்லாம் எலும்புத் துண்டுகளைக் கவ்வத்தானே?

செம்மொழி மையத்தில் கருணாநிதியை விமரிசித்ததால் அரசின் வெறுப்புக்கு ஆளாகி விட்டோமெனக் கண்ணன் கருதுகின்றார். புற்றீசல் போல ஆங்கிலக் கான்வென்டுகள் பெருக்கெடுத்து மக்களை அறியாமைக் கவர்ச்சியில் இழுத்து வரும் நிலையில் தமிழ் செம்மொழி மையமா பிரச்சினை? உழைக்கும் தமிழனுக்கு உய்வில்லாமல் தமிழ் மட்டும் உயர்ந்து விடுமா என்ன? தமிழை வைத்துப் பிழைப்பு நடத்தும் தி.மு.க அரசியலுக்கு இந்த செம்மொழி மையம் ஒரு அலங்கார நடவடிக்கைதானே ஒழிய, இதனால் தமிழுக்கு ஒன்றும் வாழ்வு கிடைத்து விடப் போவதில்லை.

கனிமொழி, சல்மா, தமிழச்சி தங்கபாண்டியன், ரவிக்குமார் போன்ற இலக்கியவாதிகள் அரசியலுக்குள் நுழைந்ததை காலச்சுவடு பொதுவில் ஆதரித்துத்தானே எழுதியது? பண்பாட்டுத் துறையில் பண்பட்டவர்கள் அரசியலுக்குள் நுழைந்தால் நல்லது பல நடக்கும் என்று எதிர்பார்த்து விட்டு, தனக்கு நல்லது நடக்கவில்லை என்பதால் மோசம் என்பது கடைந்தெடுத்த சுயநலமில்லையா? இவர்களுக்கெல்லாம் அரசியலுக்குள் நுழைவதற்கு என்ன தகுதியிருக்கின்றது? மற்றவர்களை விடுங்கள் கனிமொழியை எடுத்துக் கொள்வோம். சில கவிதைகள் எழுதியதைத் தவிர இவருக்கு அரசியலைப் பற்றியோ, மக்களைப் பற்றியோ என்ன தெரியும்? எல்லாம் ராஜாத்தி அம்மாள் தனது பங்குக்காக கருணாநிதியிடம் சண்டை போட்டு பெற்றதுதானே இந்த அரசியல் வாழ்வு? கனிமொழி ராஜ்ஜிய சபா உறுப்பினர் தேர்வுக்காகத் தனது சொத்துப் பட்டியலில் பத்து கோடி இருப்பதாக வெளியிட்டாரே? இந்த பத்து கோடி எப்படி வந்தது என்று காலச்சுவடுக்கு தெரியாதா என்ன?

கனிமொழியை வைத்து எல்லாம் சாதித்துக்கொள்ளலாம் என்பதற்காகவே அவரிடம் நட்பு பாராட்டிய காலச்சுவடு பின்பு அதே கனிமொழி செம்மொழி பிரச்சினை பற்றி காலச்சுவடு எழுதியதற்காகச் சினம் கொண்டு நூலகத்துறை ஆணையை நிறுத்திவிட்டார் என்பதில் மட்டும் கருத்துரிமையைத் தேட வேண்டிய அவசியமென்ன? கனிமொழிதான் காலச்சுவடை நிறுத்தி விட்டார் என்று



படிப்பகம்

www.padippakam.com

எழுதுவதற்குக் கூட கண்ணனுக்கு பயம். ஒருவேளை நாளை மீண்டும் சேர்ந்து விட்டால் பிழைப்பை ஓட்ட வேண்டுமென்ற பாது காப்பு உணர்வுதான் காரணம்.

நூலகத்துறையின் குழுவில் காலச்சுவடின் ஆதரவாளர்கள் வெங் கடாசலபதி போன்றவர்கள் இடம் பெற்றது கனிமொழியின் கரு ணையில்லையா? இதன் மூலம் காலச்சுவடு தனது பதிப்பகப் புத்த கங்களை நூலகத்துறைக்குள் தள்ளவில்லையா? அந்தக் கணக்கு பற்றி மட்டும் ஏன் பேச மறுக்கின்றீர்கள்? இப்படி பெரிய இடத்து தொடர்பின்றி நூலகத்துறைக்குள் தமது புத்தகங்களை அனுப்ப முடி யாமல் பல ஏழைப் பதிப்பகங்கள் இருக்கின்றனவே அவர்கள்தான் உண்மையில் பாதிக்கப்பட்டவர்கள்.

பொதுவில் இடதுசாரிப் பத்திரிகைகள் மற்றும் அவர்களது வெளியீடுகள் நூலகத்துற்றக்குள் வாங்கப்படுவதில்லை. தி.மு.க. அரசுடன் கூட்டணியில் இருந்த போதும் செம்மலர், தாமரை போன்ற பத்திரிகைகள் அரசால் வாங்கப்படவில்லை. இவர்க ளைவிட வெளிப்படையாகவும், கூர்மையாகவும் அரசை அம்பலப் படுத்தும் புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் முதலான பத்திரிகை களும் அவற்றின் வெளியீடுகளும் அரசால் கண்டுகொள்ளப்படுவ தில்லை. அவர்களும் அதனைச் சட்டை செய்வதில்லை. இது போக பெரிய இடத்து பழக்கமில்லாத பல பதிப்பகங்களும் தமது நூல்களை நூலகத்திற்கு விற்கமுடியாமல் திணறித்தான் வருகின்றன.

பொதுவில் ஒரு வர்க்கம் தனது நலனுக்காகப் பரிந்து பேசுவ தற்கு மற்ற வர்க்கங்களின் நலனும் இதில் கலந்திருப்பாத சொல்லிக் கொண்டு அதை ஒரு பொதுப் பிரச்சினையாக்கி தனது ஆதாயத்தை தேடும். காலச்சுவடுக்கு அந்த சாமர்த்தியம் கூட இல்லை. மற்ற சிறு பத்திரிகைகளையும் நூலகத்துறை வாங்க வேண்டும் என்று காலச் சுவடு பேசவில்லை. தன்னைப் பற்றி மட்டுமே அக்கறை கொள் கின்றது. அதனால் அதன் கருத்துரிமைப் போராளி வேடம் கோமா ளித்தனமாக இருக்கின்றது.

தி.மு.க அரசைப் பற்றி காலச்சுவடுக்கு பொதுவான கருத்து என்று எதுவுமில்லை. நடுநிலையில் நின்று நல்லவைகளை ஆத ரித்து, கெட்டவைகளை எதிர்ப்பார்களாம். முதலில் நடுநிலை என்ற கூற்றே ஒரு மோசடியாகும். எல்லாப் பத்திரிகைகளும் ஒரு கருத்தில் ஒரு நிலையெடுத்தே செய்திகளை வெளியிடுகின்றன. ஒரு அரசியல் நிலைப்பாடு மக்களுக்கு ஆதரவானதா, எதிரானதா என்பதைத் தாண்டி மூன்றாவதாக நடுநிலையென்பதாக ஒரு நிலையில்லை.



படிப்பகம்

www.padippakam.com

உலகமயமாக்கத்தைத் தீவிரமாக மத்திய அரசுடன் இணைந்து தமிழகத்தில் அமலாக்கி வரும் தி.மு.க அரசின் கொள்கைகளால் விவசாயிகள் வாழ்விழந்து நகரங்களுக்குக் கூலி வேலைக்காக ஓடி வருகின்றார்கள். கல்வி, சுகாதாரம் அனைத்தும் தனியார்மயமாகி நடுத்தர மக்கள் கூட அவற்றைப் பயன்படுத்த முடியாத சூழ் நிலையை நோக்கி தமிழகம் நகர்ந்து வருகின்றது. இதில் அடுத்த ஆட் சியில் வருவோமா, வர மாட்டோமா என்று தி.மு.க தளபதிகள் கிடைத்தைச் சுருட்டிக் கொண்டிருக்கின்றார்கள். கருணாநிதியோ தனது கட்சியையும், ஆட்சியையும், சொத்தையும் தமது வாரிசுக ளுக்குப் பங்கிடும் வேலையைச் செய்து வருகின்றார். இப்பேற்பட்ட மக்கள் விரோத அரசை நூலகத்துறை பிரச்சினையை மட்டும் வைத்து மதிப்பிடுகின்றது காலச்சுவடு.

இதுதான் இலக்கியவாதிகளின் அற்பவாதம். தனக்கு ஒரு குறை என்றால் உலகமே சரியில்லை என்று சாபமிடுவது சுந்தர ராமசா மியின் குருகுல மரபு. அந்த மரபின் படி காலச்சுவடும் தனது அற் பவாத அம்மணத்தைக் கூச்சமில்லாமல் காட்டிக் கொள்கின்றது.

''கருத்து'' அமைப்பின் அமைப்பாளர்களான கார்த்தி சிதம்பரம், கனிமொழி இருவருக்கும் எல்லா எழுத்தாளர்களையும் கடிதம் எழுதச் செய்திருக்கும் காலச்சுவடு இந்த இளவரசர்களின் யோக்கி யதையை வானளாவ உயர்த்தி இருக்கின்றது. பன்னாட்டு நிறுவனங் களின் வேட்டைக்காடாக இந்தியாவை மாற்றிவரும் மத்திய அரசின் முக்கிய அமைச்சரான ப.சிதம்பரம் இந்தத் துரோகச் செயலுக்கு கைமாறாகப் பல ஆதாயங்களை அனுபவித்து வருகின்றார். அதில் முக்கியமானது இவரது மகன் கார்த்தி சிதம்பரம் பல பன்னாட்டு நிறு வனங்களில் கௌரவ ஆலோசகராகப் பணியாற்றி பல கோடி சம்பளம் வாங்கி வரும் விவகாரம். தற்கொலைக்கும், வேலையின் மைக்கும் ஆளாகிவரும் விவசாயிகள் முதல் தொழிலாளர்கள் வரை நாடே பிழைப்பதற்காக நாடோடிகளாக மாறி வருவதற்கு கார ணமான முழுமுதற் குற்றவாளிகளுக்கு சன்மானம் இப்படித்தான் வழங்கப்படுகின்றது. இந்த சிகாமணிதான் கருத்து அமைப்பின் அமைப்பாளர் என்பதும் இவரிடம் மண்டியிட்டு கருத்துரிமைக்காகக் காலச்சுவடு கையேந்துவதும் இனம் இனத்தோடு சேரும் என்ப தைத்தான் காட்டுகின்றது. மக்களின் வாழ்வுரிமைக்கு எதிரான கூட் டத்தோடுதான் காலச்சுவடு நட்பு வைத்திருக்கிறது என்பதற்கு இதுவே எடுப்பான செய்தி.

கருத்துரிமை என்பது மக்களின் வாழ்வுரிமைப் போராட் டத்தோடு சம்பந்தப்பட்டது. பறிக்கப்பட்ட தமது உரிமைகளுக்காக



படிப்பகம்

www.padippakam.com

மக்கள் போராடும்போதுதான் ஆளும் வர்க்கம் அவற்றை ஒடுக்கி அந்தக் கருத்தையே பேச விடாமல் ஒடுக்கி விடுகின்றது. காலச்சுவடு உலகப் பிரச்சினைகள் தொடங்கி உள்ளூர் பிரச்சினைகள் வரை எல்லாவற்றிலும் தமது கருத்துக்களைப் பதிவுசெய்வதை வைத்துக் கொண்டு தன்னை மாபெரும் கருத்துரிமைப் போராளியாகச் சித்தரிக்கின்றது. இது புரட்சித் தலைவி தனது கட் அவுட்டை பார்த்து தனது அதிகாரத்தை பிரம்மாண்டமாக உணருவதற்கு ஒப்பானது.

கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனத்துடன் இணைந்து கோவையில் அற்றைத் திங்கள் என்னும் தலைப்பில் அருங்காட்சியக அறிஞர்களை வைத்து மாதம் ஒரு கூட்டத்தை நடத்தியது காலச்சுவடு. ஆனால் இதே கோவையில்தான் இந்து மதவெறியர்களை எதிர்த்து புரட்சிகர அமைப்புகள் கூட்டம் நடத்துவதற்குத் தடை இருக்கின்றது. கோவை ஆர்.எஸ். புரத்தில் இந்து மதவெறியர்களைக் கண்டித்தும், அப்பாவி முசுலீம்களை சிறையில் வைத்திருப்பதை எதிர்த்தும் காலச்சுவடு ஒரு பொதுக் கூட்டம் கூட நடத்தியதில்லை. அப்படி ஒரு கூட்டம் நடத்தியிருந்தால் கருத்துரிமையின் வலியைக் கண்ணன் உணர்ந்திருப்பார். காலச்சுவடு தலைமை அலுவலகம் இருக்கும் நாகர்கோவிலுக்கு அருகில் இருக்கும் நெல்லையில் கோக் நிறுவனத்தை எதிர்த்து பிரச்சாரம் செய்வதற்கு புரட்சிகர அமைப்புகளுக்கு அனுமதியில்லை. நெல்லையில் வாசகர் வட்டம் நடத்தும் காலச்சுவடு கோக் கம்பெனிக்கு எதிராகப் பொதுக் கூட்டம் வேண்டாம் ஒரு அரங்கக் கூட்டத்தைக் கூட நடத்தியதில்லை.

புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களிடம் தனது நூல்களுக்கு விரிவான சந்தையை உருவாக்கியிருக்கும் காலச்சுவடு ஈழத்தமிழர்களுக்காக அவர்களை ஒடுக்கும் இந்திய அரசு, இலங்கை அரசைக் கண்டித்து ஏதாவது கூட்டம் நடத்தியிருக்கின்றதா? புரட்சித் தலைவி ஆட்சியில் நடத்தியிருந்தால் கண்ணன் கோஷ்டி பொடாவில் கைதாகி புரட்சிப் புயலோடு சிறையில் வாலிபால் விளையாடிக் கொண்டிருந்திருக்கலாம். இதழின் அட்டையில் ஈழத்துக்காகக் கண்ணீர் விடும் காலச்சுவடு களத்தில் இறங்கியிருந்தால் உண்மையில் கருத்துரிமை என்றால் என்ன என்பதைத் தன் சொந்த அனுபவத்தில் கற்றுக் கொண்டிருக்கும்.

புக்கர் பரிசு வென்றாலும் அருந்ததி ராய் நர்மதா மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்டார். அதற்காக அவர் எழுதிய கட்டுரைக்காக நீதிமன்ற அவமதிப்பை எதிர்கொண்டு ஒரு நாள் நீதிமன்றக் காவலில்



படிப்பகம்

www.padippakam.com

இருந்தார். குடியுரிமைக்காகப் போராடிய பினாயக் சென்னை சட்டீஸ்கர் சிறையில் வைத்திருப்பதைக் கண்டித்து நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார். அப்பாவி அப்சல் குருவுக்கு தூக்குத் தண்டனை கொடுத்ததை எதிர்த்து பொது அரங்கில் விவாதத்தை எழுப்பினார். தற்போது காஷ்மீரில் நடக்கும் போராட்டத்தில் கலந்து கொண்டு காஷ்மீருக்கு விடுதலை தரப்பட வேண்டுமென எழுதுகின்றார். இவையெல்லாம் ஒரு அறிவுஜீவியின் நேர்மையான கருத்துரிமைப் போராட்டம் என்று மதிப்பிடலாம். ஆனால் காலச்சுவடின் வரலாற்றில் இப்படி ஏதேனும் ஒரு சம்பவம் உண்டா?

அவ்வளவு ஏன் 2002 குஜராத் கலவரத்திற்கு நிவாரணம் என்ற பெயரில் காசு வசூலித்த காலச்சுவடு இந்து மதவெறியர்கள் என்ற சொல்லைக் கூட பயன்படுத்தவில்லை. அப்போது இந்த வசூலுக்கு கனிமொழியும் உதவி செய்தார். அந்த நேரம் தி.மு.க கட்சி, பா.ஜ.க அரசாங்கத்தில் அங்கம் வகித்து வந்தது. இந்தத் துரோகத்தை அம்பலப்படுத்தியோ, இது குறித்து கனிமொழியிடம் ஒரு கேள்வி கூட காலச்சுவடு கேட்டதில்லை. பதிவும் செய்ததில்லை. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட இசுலாமிய மக்களை இனப்படுகொலை செய்த இந்து மதவெறியர்களின் பெயரைக் கூடச் சொல்லாமல் செயல்பட்டதுதான் காலச்சுவடின் சாமர்த்தியம். அதனால்தான் மலர்மன்னன் போன்ற இந்து மதவெறியர்கள் அதன் வாசகர்களாக இருக்கின்றார்கள்.

இப்படி பாதுகாப்பான அரங்குகளில் பாதுகாப்பான தலைப்புகளில் யாரையும் கேள்விக்குள்ளாக்காமல் கூட்டம் நடத்துவதாலேயே காலச்சுவடு தன்னைக் கருத்துரிமைப் போராளியாகக் கருதிக்கொள்கின்றது. இவற்றையெல்லாம் விட காலச்சுவடின் புரவலர்களாக இடம்பெறும் விளம்பரதாரர்கள் பலரும் மக்களின் வாழ்வுரிமைக்கு எதிரானவர்கள்தான். நல்லி சில்க்ஸூம், ஆர்.எம்.கேவியும் காஞ்சிபுரத்தில் நெசவாளர்களைக் கொத்தடிமைகளாக விலைக்கு வாங்கிக்கொண்டுதான் தனது பட்டுச் சேலைகளை விற்றும், விளம்பரமும் செய்து வருகின்றன. ஸ்ரீராம் சிட் பண்ட் நிறுவனமோ பல ஏழைகளிடம் சீட்டுப் பணம் வாங்கிக் கடன் கொடுத்து அசலை விட வட்டியை அதிகமாகக் கொள்ளையடித்து பின்பு வசூலிக்க அடியாட்களை அனுப்பி இறுதியில் வழக்கும் போட்டு அந்த மக்களை அலைக்கழிக்கின்றது. தினமலரைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. பார்ப்பனியத்தின் அடியாளாகச் செயல்படும் இப்பத்திரிகை புரட்சிகர அமைப்புக்கள், இசுலாமிய அமைப்புக்கள், ஜனநாயக அமைப்புக்கள் பற்றி



படிப்பகம்

www.padippakam.com

வெளியிட்டுள்ள அவதூறுகள், வன்மங்கள், துவேசங்களைப் பற்றித் தனியாகவே எழுதலாம்.

ஆக பல பிரிவு மக்களின் வாழ்வுரிமையைப் பிடுங்கும் நிறுவனங்களின் பிச்சையோடுதான் காலச்சுவடின் பொருளாதார அடிக்கட்டுமானம் கட்டப்பட்டிருக்கின்றது. காலச்சுவடு மேற்கண்ட நிறுவனங்களை அம்பலப்படுத்தி கட்டுரைகள் வெளியிடுவதாக வைத்துக் கொள்வோம். அப்போது என்ன நடக்கும்? அந்த நிறுவனங்கள் விளம்பரங்களை ரத்து செய்யும். இதுவும் கருத்துரிமைக்கு எதிரான செயல் என்று காலச்சுவடு பேசுமா? அப்படிப் பேசாது. ஏனெனில் அந்த விளம்பரப் பணம் அந்த நிறுவனங்களின் சொந்தப் பணம். அவற்றைப் பயன்படுத்துவதற்கு அவர்களுக்கு மட்டும் உரிமை உண்டு எனக் காலச்சுவடு வாதிடலாம். கருணாநிதி அரசு காலச்சுவடை நிறுத்தியது மக்களின் சொந்தப் பணத்தில். ஆகையால் இது கருத்துரிமைக் கணக்கில் வரும். இப்படி காலச்சுவடின் தருக்கத்தின்படி பார்த்தால் கருணாநிதிக்கு ஒரு நீதி, நல்லி குப்புசாமி செட்டியாருக்கு ஒரு நீதி என்றே வரும். இந்த அக்கப்போரைப் பார்க்கும் போது புரட்சித் தலைவி ஆட்சி வந்தால் தேவலாம் என்று தோன்றுகிறது.

அப்போதுதான் கருத்துரிமை என்னவென்பதை காலச்சுவடு அம்மாவின் தயவில் கற்றுக் கொள்ளும். ஆனால் அம்மா அவர்கள் காலச்சுவடு போன்ற இலக்கியக் கோமாளிகளையெல்லாம் தனது தரத்திற்கேற்ற எதிரியாகக் கருதும் வாய்ப்பில்லை என்பதால் கருத்துரிமை பற்றிக் காலச்சுவடு தெரிந்துகொள்ள முடியாமலே போகலாம். அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?

•••



படிப்பகம்

www.padippakam.com

# கவிஞர் சுகுமாரன் நினைவில் காரல் மார்க்ஸ்!

''இன்னொரு பிறவி இருப்பதாக கற்பனை செய்து கொண்டு சொல்லுங்கள், அடுத்த பிறவியில் என்னவாக இருக்க விரும்பு வீர்கள்?'' என்ற கேள்விக்கு, 'மனிதனாகப் பிறக்க விரும்ப மாட் டேன்' என்று மார்க்ஸ் பதிலளித்தார்'' என்று உயிரோசை இணைய இதழில் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார் கவிஞர் சுகுமாரன்.

''மனிதனாகப் பிறக்க விரும்ப மாட்டேன்!'' - வாழ்க்கையின் துன்பங்களால் நைந்து போன ஒரு மனிதன், களைத்துத் துவண்ட ஒரு தருணத்தில் சொல்லியிருக்கக் கூடிய வார்த்தைகள்! எனினும் மார்க்ஸ் இங்ஙனம் சொல்லியிருக்கக் கூடுமா?

''இதுநாள் வரை தத்துவஞானிகள் உலகை வியாக்கியானம் செய்தார்கள். நமது பணி அதனை மாற்றியமைப்பதுதான்'' என்று பிரகடனம் செய்த ஒரு மேதை,

''இயற்கையின் நடத்தையை ஆளும் இயக்க விதிகளை மனிதன் கண்டுபிடித்துவிடலாம், ஆனால் தன்னுடைய (மனித குலத்து டைய) இயக்கத்தை ஆளும் விதிகளை மட்டும் கண்டுணரவே முடியாது'' என்று தனக்கு முன் தானே பிரமித்து நின்ற மனிதகு லத்தை, அந்தப் பிரமிப்பிலிருந்து விடுவித்த ஒரு தத்துவஞானி, தாங்களே உருவாக்கும் வரலாறு, தங்களை எப்படி வனைந்து உருவாக்குகிறது என்ற சூட்சுமத்தை அவிழ்த்துக் காட்டியதன் மூலம், தாம் விரும்பும் விதத்தில் தம்மை உருவாக்கிக் கொள்வ தற்கான வழிமுறையை மனிதகுலத்துக்குக் கற்றுக் கொடுத்த ஒரு



படிப்பகம்

www.padippakam.com

மாபெரும் அறிவியலாளன், ''நான் மனிதனாகப் பிறக்க விரும்பமாட்டேன்'' என்று சொல்லியிருக்கக் கூடுமா?

மார்க்சியத்தைத் தமது வாழ்க்கை நடைமுறைக்கான வழிகாட்டியாக ஏற்றுக் கொண்ட கம்யூனிஸ்டுகளுக்கு மட்டுமல்ல, ஒரு தத்துவ ஞானம் என்ற முறையில் மார்க்சியத்தைப் புரிந்து கொண்ட யாருக்கும் எழும்பியிருக்க வேண்டிய கேள்வி இது. ஆனால் சுகுமாரனுக்கு அக்கேள்வி எழும்பவில்லை.

அவரைப் பொருத்தவரை, 'எப்பவோ எதிலேயோ படித்தது' என்று சர்வசாதாரணமாக பழைய நினைவிலிருந்து போகிற போக்கில் சொல்லிவிட்டுப் போகிற அளவுக்கு, மிகச் சாதாரண விசயமாக அது இருந்திருக்கிறது.

ஒருவேளை மார்க்ஸ் அவ்வாறு கூறியிருந்தால்?

அவ்வாறு கூறுவதற்குத் தேவையான கசப்புகளை சகிக்க வொண்ணாத அளவில் அவர் மீது திணித்திருந்தது வாழ்க்கை. அருமைக் குழந்தைகளின் பட்டினிச்சாவு, அதனைக் கண்டு துடித்த காதல் மனைவியின் கண்ணீர், கற்பூரவாசம் அறியாத கழுதைகளான கடன்காரர்களின் தரம் தாழ்ந்த ஏச்சு, தொழிலாளி வர்க்கத்தின் துயரத்துக்காகக் கண்ணீர் சிந்துவதை நிறுத்திவிட்டு, தன் குடும்பத்தின் துயர்தீர்க்க ஒரு குமாஸ்தா வேலையின் மீது தன்னை அறைந்து கொள்ளலாம் என்று எண்ணத் தூண்டிய இதயம், அதனை அனுமதிக்க மறுத்த சிந்தனை, நண்பர்கள் பலரின் கொள்கை ரீதியான பிரிவு, அவரை நிலைகுலையச் செய்த ஜென்னியின் மரணம்.. ஒருமுறை அல்ல, ஒரு நூறு முறை அவரை இவ்வாறு சொல்லத் தூண்டிய சந்தர்ப்பங்கள் உண்டு.

ஒரு வேளை சொல்லியிருந்தால்?

சொல்லியிருந்தால் அது அந்த மாமனிதனின் ஒரு துயரப் பெருமூச்சு.

பீத்தோவனின் பேனாவிலிருந்து தெறித்து விழுந்து, அவரே அறியாமல் அவரது சிம்பனியின் அழகைத் துலங்கச் செய்த ஒரு அபசுரம்.

ஒரு மாவீரனின் கண்ணில் கசிந்த கவிதைத் துளி. தீஞ்சுவை இனிப்பில் கலந்த ஒரு கல் உப்பு.



படிப்பகம்

www.padippakam.com

மார்க்ஸ் அவ்வாறு கூறியிருந்தால், அது இரக்கமற்ற இதயத்தி லிருந்தும் ஒரு துளி கண்ணீரை வரவழைக்க வேண்டும். தனது அந்தக் கூற்றின் சுவடு கூடப் படாமல் வாழ்ந்து காட்டிய அந்த வீரனின் மன உறுதி நமக்கு வியப்பை ஏற்படுத்த வேண்டும். அந்த மாமனிதன் சொற்களால் சிந்திய கண்ணீர் மனித குலத்தின் இதயத்தைப் பிழிய வேண்டும்.

என்ன சொல்ல வருகிறார் சுகுமாரன்? எதற்காக இதனைச் சொல்ல வருகிறார் சுகுமாரன்?

இத்தகையதொரு சர்ச்சைக்குரிய மேற்கோளைத் தனது நினை விலிருந்து அகழ்ந்தெடுத்து வாசகர்களுக்கு அவர் வழங்கியிருப் பதன் நோக்கம் என்ன?

நம்பிக்கை என்ற சொல்லின் அடித்தளத்திலிருந்து புனிதங்களை அகற்றி விட்டு, அறிவியல் பீடத்தின் மேல் அதனை அமர்த்திய 'உலகின் மாபெரும் நம்பிக்கைவாதி' என்று கொண்டாடப்படும் மார்க்ஸ் ''இன்னொரு அவநம்பிக்கை வாதிதான்'' என்று பணிவுடன் சுட்டிக் காட்டுகிறாரா?

அல்லது ''கடவுள் செத்துவிட்டார். அதை அவரே ஒப்புக் கொண் டிருக்கிறார்'' என்று கம்யூனிஸ்டுகளை கலாய்க்கிறாரா?

அல்லது உலகம் போற்றும் கம்யூனிஸ்டு 'திரு உரு'வின் பின்பு றத்தில் நம் கண்ணில் இதுவரை படாத ஒரு சொட்டை இருக்கிறது என்று கவனத்தை ஈர்க்கிறாரா?

இவற்றில் முதல் இரண்டும் அவரது நோக்கம் என்றால் அதனை அசட்டுத்தனம் என்றோ, தனது அசட்டுத்தனம் குறித்த பிரக்ஞை இல்லாத ஒரு ''அதிமேதாவி'யின் அபத்தமான உளறல் என்றோ விட் டுவிடலாம்.

திரு உருவின் ஊனத்தைச் சுட்டிக் காட்டுவது சுகுமாறனின் நோக் கமென்றால், இலக்கியவாதி என்ற அந்தஸ்தையே அவர் இழக்க நேரிடும்.

''குறையில்லாத மனிதன் இருக்க முடியாது; நல்லது-கெட்டது, கறுப்பு-வெள்ளை என்று உலகத்தை இரட்டைப் பரிமாணத்தில் பார்ப்பது தவறு'' என்பன போன்ற வேத வசனங்களைத் தமது இலக் கியக் கொள்கையாகவும், 'கொள்கைப் பற்று' என்பதையே கூடா ஒழுக்கமாக கொண்டு வாழும் தங்களது வாழ்க்கையை நிறுத்துப்



படிப்பகம்

www.padippakam.com

பார்த்து நியாயப்படுத்திக் கொள்வதற்கான எடைக்கற்களாகவும் வைத்திருக்கும் இலக்கியவாதிகள், மனிதர்களின் ''ஊனம்'' குறித்து அதிர்ச்சி கொள்ள முடியாது.

மார்க்ஸ் வெறுப்பு கொள்ளக்கூடாதா? லெனின் கோபம் கொள்ளக கூடாதா? பகத்சிங் கண்ணீர் விடக் கூடாதா? அவை மனிதர்களுக்கு உரியவை இல்லையா? அந்த வெறுப்பும் கோபமும் கண்ணீரும்தான் அவர்களது ஆளுமையை நிர்ணயிக்கும் அளவு கோல்களா?

அவற்றின்பால் வாசகர்களின் கவனத்தை வேலை மெனக்கெட்டு ஈர்க்கிறாரே சுகுமாரன், அது எதற்காக? ஊனத்தைச் சுட்டிக் காட்டும் பொருட்டு அவர் இதனைச் செய்திருந்தால், புனித திருஉருவைத் தொழுகின்ற ஒரு எம்ஜியார் ரசிகனின் தரத்தில் அவர் இருக்கிறார் என்பதை அவரே புரிந்து கொள்ளட்டும். அறிவு பூர்வமாக இதனைச் செய்திருப்பாரானால் தனது நோக்கத்துக்கு அவர் விளக்கம் கூறட்டும்.

ஒரு இலக்கியவாதியின் வாயிலிருந்து எந்த நோக்கமும் இல்லாமல் தற்செயலாக வெளிப்படுவதற்கு 'சொற்கள்' எனப்படுபவை, பின்புறத்திலிருந்து வெளிப்படும் வாயு அல்லவே!

•••

''மார்க்ஸ் இவ்வாறு பதிலளித்திருப்பது உண்மைதானா?'' என்று ஒரு வாசகர் எங்களிடம் விளக்கம் கேட்டிருந்தார். confessions என்ற தலைப்பில் தன்னுடைய மகளின் கேள்விகளுக்கு பதிலளித்திருக்கிறார் மார்க்ஸ். இதே போன்ற பதில்களை மார்க்ஸின் மனைவி ஜென்னியும், எங்கெல்ஸும் கூட அளித்திருக்கின்றனர். வேடிக்கையான முறையிலும் பொருட்செறிவுடனும் அளிக்கப்பட்டிருக்கும் அந்தப் பதில்கள், அவர் எழுதிக் குவித்த ஆயிரம் பக்கங்களில் அரைப்பக்கத்துக்குக் கூடக் காணாதவை. அவற்றை ஒரு வரிப் பிரகடனமாகவோ, மார்க்சியத்தின் சாரமாகவோ, மார்க்சுடைய ஆளுமையின் வெளிப்பாடாகவோ புரிந்து கொண்டு மேற்கோள் காட்டுவதை, மிகவும் மரியாதையான சொற்களில் சொல்லுவதென்றாலும் முட்டாள்தனம் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

எனினும் வாசகர்களுக்கு என்ன விதமான தெளிவை ஏற்படுத்தும் பொருட்டு இந்த மேற்கோளை சுகுமாரன் கையாண்டிருக்கிறார் என்று தெரிந்து கொள்ளாமல், 'முட்டாள்தனம்' என்பன



படிப்பகம்

www.padippakam.com

போன்ற சொற்களைப் பயன்படுத்துவது நியாயமல்ல என்பதால், உயிரோசையில் அவருடைய கட்டுரையைப் படித்தோம்.

கம்யூனிஸ்டு அறிக்கையை இலக்கிய நோக்கில் வாசித்து அதன் நடையைப் பற்றி உம்பர்ட்டோ ஈகோ என்ற இத்தாலிய சிந்தனையாளர் எழுதியுள்ள ஆழமான கட்டுரையொன்றை சுகுமாரன் படித்தாராம்.

''அதன் உட்பொருள் என்னவாக இருந்தாலும் அது கொண்டிருக்கும் இலக்கியக் குண்மே அந்த வெளியீட்டை இந்த அளவு வலிமையுள்ள பிரதியாக ஆக்கியது'' என்கிறாராம் ஈகோ. உலகமயமாக்கல் என்ற சொல்லைப் பயன்படுத்தாமலேயே நூற்றியறுபது ஆண்டுகளுக்கு முன்பு அதன் விளைவுகளைப் பற்றி கம்யூனிஸ்டு அறிக்கையில் மார்க்ஸ் குறிப்பிட்டிருப்பதாகச் சொல்கிறாராம் உம்பர்ட்டோ ஈகோ.

''உலகமயமாக்கலை எதிர்க்கும் எல்லா சக்திகளும் முதலில் பிளவுபடுத்தப்படும். பின்னர் குழப்பப்படும். அதன் பின்னர் அந்தச் சக்திகளே உலகமயமாக்கலை ஆதரித்துப் போராடத் தொடங்கும்'' என்ற உண்மையை மார்க்சின் பிரகடனத்திலிருந்து ஈகோ வாசித்துக் கண்டுபிடித்திருக்கிறாராம். ''இந்த உண்மை இன்றைய நிஜம்'' என்று கூறும் சுகுமாரன் கீழ்க்கண்டவாறு தொடர்கிறார்.

''மார்க்சின் நூல்கள் மீண்டும் அவரது தாய்மொழியான ஜெர்மனில் மறுபதிப்புப் பெறுகின்றன. .. உலகப் பொருளாதாரச் சிக்கல் தங்களுடைய வாழ்க்கையை அவலமாக்கியிருக்கிறது; மார்க்ஸ் கனவு கண்ட சமுதாயத்தில் மனிதமிருக்கிறது என்று அவர்கள் நம்புவதாகவும் முர்டோக்கின் நாளிதழ் கட்டுரை வெளியிட நேர்ந்திருக்கிறது.''

''இது காரல் மார்க்சின் நான்காம் பிறவி என்று பெர்லின் பல்கலைக்கழகப் பேராசிரியர் வோல்ப் காங்க் விப்பர்மான் வியக்கிறார். முந்தைய மூன்று ஜென்மங்களிலும் மார்க்ஸ் வரவேற்கப்பட்டார். விவாதிக்கப்பட்டார். அவருடைய கருத்துகள் திரிக்கப்பட்டன. கடைசியில் வீசியெறியப்பட்டன.

நான்காவது ஜென்மத்தில் மார்க்ஸ் என்ன ஆவார்?

''மார்க்ஸ் உயிரோடிருந்தபோது அவரிடம் நடத்தப்பட்ட நேர்காணல் ஒன்றில் கேட்கப்பட்ட கேள்விகளில் ஒன்று. மறுபிறவி



படிப்பகம்

www.padippakam.com

ஒன்று இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு சொல்லுங்கள். நீங்கள் என்னவாக இருக்க விரும்புவீர்கள்?'

'மனிதனாகப் பிறக்க விரும்ப மாட்டேன்' என்பது மார்க்ஸின் பதில்.''

- இத்துடன் சுகுமாரனின் கட்டுரை முடிவடைகிறது.

●●●

1. கம்யூனிஸ்டு அறிக்கை அதன் இலக்கியத் தரம் காரணமாகத்தான் 160 ஆண்டுகளான பின்னரும் உயிரோடு இருக்கிறது.

2. உலகமயமாக்கலை எதிர்க்கும் சக்திகளே அதனை ஆதரித்துப் போராடத் தொடங்குவார்கள் என்ற உண்மையை மார்க்சின் எழுத்திலிருந்து ஈகோ கண்டுபிடித்திருக்கிறார். அது இன்று நிஜமாகி விட்டது.

3. மார்க்சின் நூல்கள் இன்று பெருமளவில் விற்பனையாகின்றன. மார்க்சுக்கு இது நாலாவது பிறவி என்கிறார் ஒரு ஜெர்மன் பேராசிரியர்.

4. ஆனால் மார்க்சோ ''எனக்கு மீண்டும் மனிதனாகப் பிறப்பதிலேயே விருப்பமில்லை'' என்று கூறியிருக்கிறார்.

சுகுமாரனின் கட்டுரையில் கண்டுள்ள மேற்கூறிய நான்கு பாயிண்டுகளில் முதல் இரண்டும் உம்பர்ட்டோ ஈகோவால் முன்மொழியப்பட்டு சுகுமாரனால் வழிமோழியப்பட்டவை. மூன்றாவது பாயிண்டு ஜெர்மன் பேராசிரியருடையது. நான்காவது பாயிண்டு சுகுமாரனின் சொந்த எழுத்து.

கம்யூனிஸ்டு அறிக்கை அதன் இலக்கியத்தரம் காரணமாகத்தான் இத்தனை காலம் உயிரோடு இருக்கிறதாம். இந்த மதிப்பீட்டை தரம் தாழ்ந்த நகைச்சுவை என்பதா, சின்னத்தனமான தந்திரம் என்பதா?

முதலில் கேள்வி பதில் வடிவத்தில் எங்கெல்ஸால் எழுதப்பட்ட அறிக்கை, பொருத்தமானதாக இல்லை என்று மார்க்ஸ் எங்கெல்ஸ் இருவருமே முடிவு செய்து, அதன் பின்னர் எழுதப்பட்டதுதான் தற்போது நாம் படிக்கும் கம்யூனிஸ்டு அறிக்கை.

மார்க்சினுள் கருக்கொண்டிருந்த பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தின் வீரியமிக்க கவித்துவ வெளிப்பாடாக, இனி வர



படிப்பகம்

www.padippakam.com

விருக்கும் அவரது ஆய்வுகளின் கம்பீரமான துவக்கவுரையாக, ஒரு முன்வரைவுக்கேயுரிய தயக்கத்தின் நிழலும் படியா வண்ணம் முதலாளித்துவத்தின் தலைவிதியை அறுதியிட்டுக் கூறிய இறுதித் தீர்ப்பாக.. படிக்கும் ஒவ்வொரு தருணத்திலும் நமது உள்ளத்தில் புதுப்புனலாகப் பொங்குகிறது கம்யூனிஸ்டு அறிக்கை.

இதுதான் கம்யூனிஸ்டு அறிக்கை வழங்கும் அனுபவம். இந்த அனுபவம் அதன் உட்பொருளுடன் இணைந்த அனுபவம். அறிக்கையின் இலக்கியத் தரத்தை விதந்து கூறும்பொருட்டு உம்பர்ட்டோ ஈகோ ஒப்பிட்டுக் காட்டும் ஷேக்ஸ்பியரையும் பீத்தோவனையும் அறியாதவர்களான கம்யூனிஸ்டு அறிக்கையின் 99% வாசகர்களுக்கு ஏற்படும் அனுபவம். அவர்களது மனதை அறிக்கை இன்னமும் ஆட்சி செய்வதற்கான முதற்காரணம் அதன் உட்பொருள்தான்.

''அதன் உட்பொருள் என்னவாக இருந்தாலும்'' ரசனை இன்பத்தை வழங்குவதற்கு கம்யூனிஸ்டு அறிக்கை, மியூசிக் அகாதமி கச்சேரி இல்லை. எனினும் சுகுமாரன் கூற்றுப்படி பார்த்தால், உம்பர்ட்டோ ஈகோ அந்த அறிக்கையைப் படிக்கும்போது அவரது செவி பீத்தோவனையும், சிந்தனை ஷேக்ஸ்பியரையும், இதயம் விவிலியத்தையும் தன்னுணர்வற்று ஒப்பு நோக்கிக் கொண்டிருந்திருக்கின்றது என்று தெரிகிறது.

''கம்யூனிஸ்டு அறிக்கையையும், மூலதனம் நூலையும் இலக்கியம் என்ற முறையில் ரசியுங்கள், கட்சி இலக்கியம் என்ற முறையில் கற்காதீர்கள்'' என்றுதானே நம்மூர் இலக்கியவாதிகளே இளைஞர்களை ஆற்றுப்படுத்துகிறார்கள்! இதற்கு இத்தாலியிலிருந்து உம்பர்ட்டோ ஈகோவின் தேவ சாட்சியம் தேவையா என்ன?

ஐநூறும் அறுநூறும் கொடுத்து உம்பர்ட்டோ ஈகோவை வாங்கி அவர் வழியாக கம்யூனிஸ்டு அறிக்கையைப் சுகுமாரன் புரிந்து கொள்வது பற்றி நமக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் நாலணாவுக்கு என்.சி.பி.எச் சில் அந்தப் புத்தகத்தை வாங்கிப் படித்து, அறிக்கை பற்றிய தன் சொந்தக் கருத்து என்ன என்பதையும் சுகுமாரன் சொல்லியிருக்கலாம்.

அப்படிப் படிக்காததன் விளைவைப் பாருங்கள்!

உலகமயமாக்கத்தின் எதிர்ப்பாளர்கள் கூட அதனை ஆதரித்துப் போராடுவார்கள் என்று மார்க்ஸ் கூறியதாக உம்பர்ட்டோ ஈகோ கூறியிருப்பதாகவும், அது இன்று நிஜமென்று நிரூபிக்கப்பட்டு விட்ட



படிப்பகம்

www.padippakam.com

தாகவும் சொல்கிறார் சுகுமாரன். கம்யூனிஸ்டு அறிக்கையில் மார்க்ஸ் எங்கே அவ்வாறு கூறியிருக்கிறார் என்பதை நமக்கு எடுத்துக் காட்டுவாரா சுகுமாரன்?

உலகமயமாகி வரும் முதலாளிவர்க்கத்தை ஒழிக்க, தொழிலாளிகளையும் உலகமயமாகச் சொன்னார் மார்க்ஸ். ''உலகத தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!'' என்ற அவரது புகழ்பெற்ற அறைகூவலின் பொருள் இதுதான்.

முதலாளித்துவம் தான் உயிரோடு இருப்பதற்காகவே உலகமயமாக்கலைத் திணிக்கிறது என்று மார்க்ஸ், அறிக்கையில் விளக்குகிறார். முதலாளித்துவம் தோற்றுவிக்கும் நெருக்கடிகளும் பேரழிவும் அதன் அழிவை எப்படி தவிர்க்கவியலாத அவசியமாக்குகின்றன என்று நிறுவுகிறார். நிஜம் என இன்று மீண்டும் நிரூபிக்கப் பட்டிருப்பது இதுதான்.

இன்றைய உலகமயமாக்கல் என்பது முதலாளித்து உலகமயமாக்கல். இதனால் பாதிக்கப்பட்டவர்கள்தான் மார்க்ஸின் நூல்களை வாங்குவதற்கு வரிசையில் நிற்கிறார்கள். உலகமயமாக்கத்தின் தீவிர விசுவாசியான மன்மோகன் சிங் சுவிசேச சபையினர் கூட அமெரிக்க திவாலுக்குப் பிறகு ''அல்லேலுயா'' என்று உரக்கச் சத்தமிடப் பயந்து அடக்கி வாசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் இன்றைய நிஜம்.

அமெரிக்காவிடம் பட்ட செருப்படி தினமணி வைத்தியநாதனையே புரட்சிக்காரனாக்கியிருக்கிறது. நாலு நாட்களுக்கு முன் தினமணி தலையங்கம் எழுப்பியிருக்கும் புரட்சி முழக்கத்தையாவது சுகுமாரன் படித்துப் பார்க்க வேண்டும். சலிப்பூட்டும் அன்றாட உலக நடப்புகளில் இலக்கிய மனம் ஈடுபாடு கொள்வது கடினம் என்பது புரிகிறது. எனினும் இந்த உலகத்தில் வாழ நேர்ந்த துரதிருஷ்டத்துக்காகவாவது நிஜம் என்ன என்பதைத் புரிந்து கொள்ள பேப்பரைப் புரட்டிப் பார்த்துக் கொள்வது அவசியமாக இருக்கிறதே!

மார்க்சுக்கு இது நாலாவது பிறவி என்பது அடுத்த பாயிண்டு. அவர் மனிதனாகப் பிறப்பதையே விரும்பவில்லை என்பது சுகுமாறன் சுட்டிக் காட்டும் கடைசி பாயிண்டு.

மார்க்ஸ் கனவு கண்ட சமுதாயத்தில்தான் மனிதம் இருக்கிறது என்று உலகமே அவர் நூலை போட்டி போட்டுக் கொண்டு வாங்கிப் படிக்கிறதாம். கோடீசுவரன் முர்டோக்கின் பத்திரிகையே இந்த



படிப்பகம்

www.padippakam.com

உண்மையை வெளியிட வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதாம். நாலாவது பிறவி என்று ஜெர்மன் பேராசிரியர் சொல்கிறாராம்.

ஆயினும் சுகுமாரன் என்ன சொல்கிறார்?

''மீண்டும் ஒரு முறை பிறப்பதில் தனக்கே விருப்பமில்லை'' என்று மார்க்சே கூறியிருப்பதாக சுகுமாரன் சொல்கிறார். இது போகிற போக்கில் எடுத்தாளப்பட்ட ஒரு மேற்கோளல்ல. அவர் எழுதியிருக்கும் கட்டுரையின் முத்தாய்ப்பு.

''தத்துவத்தைப் படைத்தவரே அதன் மீது நம்பிக்கை இழந்து விட்ட சூழலில், அந்த மனிதனின் எழுத்தைப் படிப்பதற்கு புதிதாக ஒரு கூட்டம் கிளம்பியிருக்கிறதே, என்ன உலகமடா!'' என்று சுகுமாரன் மனதிற்குள் விரியும் இகழ்ச்சிப் புன்னகையா?

மார்க்சியம் எனும் மடமையில் மூழ்காமல் மக்களைத் தடுக்க, மார்க்சையே மேற்கோள் காட்டி அவர் எழுப்ப விரும்பிய தடுப்புச் சுவரா?

அவநம்பிக்கைவாத மார்க்சியம் எனும் புதியதொரு சிந்தனைப் பள்ளியைத் தோற்றுவிக்க விழையும் துவக்கப்புள்ளியா?

அல்லது ''ஆ'' என்று வாசகர்களை அதிசயிக்க வைக்கும் அற்ப நோக்கத்துக்காக முத்தாய்ப்பு வரியில் தன்னிச்சையாக முகிழ்த்த வார்த்தைக் கழைக்கூத்தா?

இல்லை, சுகுமாரன் தான் எழுத விரும்பிய கவிதையை, மார்க்சின் கையைக் கொண்டு எழுத வைத்திருக்கும் கீழ்த்தரமான தந்திரமா?

மார்க்சின் அந்த மேற்கோளை எந்தப் புத்தகத்தில் படித்தோம் என்று அலமாரியைத் துழாவுவதை விட, அப்படியொரு மேற்கோள் இருப்பதாகவே கொண்டாலும், ''அது தன் நினைவில் ஆழப் பதிந்தது ஏன், அந்தக் கட்டுரையின் இறுதி வாக்கியமாக வந்து விழுந்தது ஏன்?'' என்ற கேள்விகளுக்கு விடை காண சுகுமாரன் தன்னைத் துழாவிப் பார்க்கட்டும்.

●●●



படிப்பகம்

www.padippakam.com

## பாரு நிவேதிதா - சுயமோகன் ஒரு லடாய்!

ஆறு தமிழரில் ஒரு தமிழர் வசிக்கும் சென்னை மாநகரத்திலே, பல் விளக்காமல் விழுங்கிய ஒரு குலோப்ஜாமுனின் ஸ்வீட்டான மாலை நேரத்து மயக்கத்திலே, தமிழர் தம் பண்பாட்டுச் சிக்கல்களை நுண்ணிய அளவிலே கண்டுபிடித்து யாருக்கும் தெரியாமல் நைசாக வெளியே விடும் ஒரு கெட்ட வாயுவின் நாசுக்குடன் முடிச்சவிழ்க்கும் ஒரு சிற்றிலக்கியப் பத்திரிகையின் வரலாற்றுச் சிறப்பு மிக்க கூட்டமொன்று, புவியியல் சிறப்புமிக்க கூவம் நதிக்கரையின் அருகில் அண்ணா சாலையின் மத்தியில் நடைபெற்றது. சிந்தனையில் தோய்ந்து வெளிறிய கண்களுடன், கவலை குடிகொண்ட இதயத்துடன், பிஸியாக இருப்பதைப் பறைசாற்றும் செல்பேசி ரீங்காரங்களுக்கு மத்தியில் சென்னை மாநகரின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் நவீனத் தமிழ் இலக்கியவாதிகள் சுறுசுறுப்புடன் வந்து கொண்டிருந்தனர். கவிஞர் அண்ணாச்சி மட்டும் எல்லோரையும் கெட்ட வார்த்தை சொல்லி வைது கொண்டிருந்தார். அண்ணாச்சியின் அன்புப் பிடியில் சிக்காமல் எல்லோரும் எஸ்ஸாகிக் கொண்டிருக்க, தவறிச் சிக்கிய ஒரு இளைஞனிடம், பாலா படத்தில் தான் பிச்சைக்காரனாக நடித்தது குறித்து ரொம்பவும் துக்கப்பட்டு புலம்பிக் கொண்டிருந்தார். இளைஞன் அண்ணாச்சியின் பார்வையிலிருந்து தன் பாக்கெட்டிலிருந்த 100 ரூபாய் நோட்டை அகற்ற அரும்பாடு பட்டுக் கொண்டிருந்தான்.

மேற்படி கூட்டத்தின் நட்சத்திரப் பேச்சாளர்கள் பா.நி, சு.மோ இருவர் மட்டும்தான் என்பதை ஈண்டு எடுத்துரைக்கத் தேவையில்லை. ஒற்றைக் கடுக்கனுடன், மால்டோ வடோவா படம்



படிப்பகம்

www.padippakam.com

போட்ட வானவில் வண்ண டீ-காபி சட்டை, முக்காலி நீள பெர்முடா, தூக்கி விடப்பட்ட ரேபான் கண்ணாடி, முக்கியமாக பக் கவாட்டில் சரியும் 50 வயதுத் தொப்பையுடன் வந்த பா.நி வேற்றுக் கிரக ஜீவராசிகளைச் சந்திப்பது போல, நடந்து வந்தார். காதோரம் ஏறிய நரையுடன், முழுக்கைச் சட்டை, இன் செய்யப்பட்ட பேண்ட், செருப்பு என 9 - 5 தோற்றத்துடன் சு.மோ, தன்னால் மட்டுமே கண் டுபிடிக்கப் படுவதற்காகக் காத்திருக்கும் ஏதோ ஒரு தத்துவப் பிரச் சினையை ஆய்ந்த சலிப்புடன் அதே வேளையில் கூட்டத்தை உற்றுக் கவனித்தவாறு அதாவது தனது ஆதரவாளர்கள் எத்தனை பேர் என்று எண்ணியவாறு ஒரு சதாவதானி போல வந்து கொண்டிருந்தார். கூட் டத்திற்கு முன் இருவரும் ஒரே நேரத்தில் இப்படி எதிரெதிரே சந் திப்போம் என எதிர்பார்க்கவில்லை.

சந்தித்தார்கள், கை குலுக்கினார்கள், உரையாடினார்கள்.

சு.மோ: ஹலோ பாரு எப்டி இருக்கீங்க,, பை பாஸ் சர்ஜரி முடிஞ்சு ஹெல்த் பரவாயில்லையா, உடம்பைப் பார்த்துக்கோங்க, இப்ப பாத்தீங்கன்னா உடம்பே ஆலயம்னு பண்டு சித்தர், இப்போ பல டாக்டர்ஸே ஒத்துக்கிட்ட விசயம்.... (வயதுக்கேத்த மாதிரி சட்டை போடாம அரை லூசு மாதிரி... ஆபரேசன் பண்ணா உன் கொழுப்பையா எடுக்க முடியும்)

பா.நி: ம் ம்.. நல்லா இருக்கேன் ( இவ்ளோ யூத்புல்லா இருப்ப வனைப் பார்த்து இந்த அம்மாஞ்சிப்பய வேணும்னே கேக்குறானே, எவ்ளோ திமிர் இருக்கும்) பை தி வே! கஜிதன் நல்லா மார்க் வாங்கி ருக்கான்னு கேள்விப் பட்டேன். நல்லா என்கரேஜ் பண்ணுங்க! எனக்கும் அவனுக்கும் ஜாக்கி சான், ரஜினின்னு ஒத்துப்போற விசயம் பலது இருக்கு (உன்னோட ரம்பத்துக்கு அந்தப் பையன் எவ்வளவோ மேல், அவன்ட்டயும் டெய்லி விஷ்ணுபுரம் கதையச் சொல்லி சாவடிக்கறத நிறுத்தவா போற?)

சு.மோ: அதாவது பாரு.. இந்த உலகத்துல நாம நினைச்சு எதையும் செய்யறதில்ல. பாறைக்குள்ளேர்ந்து செடி முளைக்கிற மாதிரி அவனே பாத்துக்குவான்னு நினைக்கறேன். அவனைப் பத்தி நான் எழுதின பதிவை ''தந்தைமை'' ன்னு சொல்லி, தமிழில்ல இதுதான் பெஸ்ட்டுன்னு கனுஷ்ய பத்திரனே சொல்லிருக்காரு.

பா.நி: (அவனை நொண்டி நாய்னு சொல்லி ஒரு கதை எழுதி னவன் நீ. அதுக்கு பழிவாங்கியிருப்பான்) அப்டியா நான் படிக் கலயே!



படிப்பகம்

www.padippakam.com

சு.மோ: ஆமா. அதுக்கு மட்டும் ஐம்பதாயிரம் ஹிட்ஸ். மத்தபடி அவன் இப்ப ரஜினி, ஜாக்கி சானையெல்லாம் விட்டுட்டான். இப்போ ஜென் தத்துவம், சங்ககாலக் கவிதைகள், சத்திய சோதனை, அயோமா பவுத்தம்னு மூழ்கிட்டான் *(சிங்கத்துக்கு பிறந்தது பன்னிக் குட்டியாகுமா முட்டாளே !).* அப்புறம் கூட்டத்துக்கு எப்படி வந் தீங்க ? நான் திருவனந்தபுரத்துல இருந்து ஜெட் ஏர்வேஸ்ல வந்தேன். ஏர்போர்ட்ல என்னோட வாசகர், அம்பத்தூர்ல பெரிய பேக்டரியெல்லாம் வச்சுருக்குராரு. அவர்தான் என்னைப் பிக்கப் பண்ணி இங்க கூட்டி வந்தாரு *(இதெல்லாம் சொன்னா உனக்கு பிரஷர் ஏறுமே, என்ன இருந்தாலும் சென்னையில கூட நான்தான் உன்னை விட பாப்புலர்).*

பா.நி: *(நான்-ஸ்டாப் ஃபிளைட்ல பாரிசு, சிங்கப்பூர், பாங்காக்னு போய்க்கிட்டு இருக்கவன் கிட்ட கட்ட வண்டியில போறதைப் பத்தி பேசுறான், ஃபூல்)* நான் ஸ்டேட்ஸ்ல இருந்து ஒரு அமெரிக்கன் மேட் என்னோட ஸீரோ டிகிரி பற்றி அதோட அமெரிக்க ரில வென்ஸ் பற்றி டாக்டரேட் பண்றார். அவரை கன்னிமாரா பார்ல பாத் துட்டு அப்புடியே நடந்து வாரேன் *(உன்னோட லெவல் ஆந்திரா பார்டர் தாண்டாது மச்சி. இதக் கேட்ட ஒடனே வயிறு பத்தணுமே!).*

சு.மோ: இந்த மாதிரி ரிசர்ச் பத்தியெலாம் எனக்கு நல்ல ஒப்பீ னியன் இல்ல பாரு. எல்லாம் அகாடமிக் ஃபிரேம்குள்ள இருந்து எல் லாத்தையும் பாப்பாங்க! ஊர்க்குருவியின் சுதந்திரம் கூண்டுக்கிளிக்கு வராதுல்ல *(அமெரிக்காவுல இல்லாத போர்னோ எழுத்தா? உன் னோடது பத்தி ஆராய்ச்சி செய்ய வாரான்னா அவன் எவ்ளோ மேங்கோ மடையனா இருக்கணும்).* நானும் அடுத்த மாசம் கனடா போறேன். நயாக்ரா பக்கத்துல நைவேத்திய கிரின்னு ஒரு ஆசிர மத்துல இளைஞர்களுக்கு கவிதை பத்தி கிளாஸ் எடுக்குறோம். இன் னைக்குக் கூட அதப்பத்தித்தான் பேசலாம்னு இருக்கேன்.

பா.நி: எல்லாம் அகாடமிக்ன்னு முத்திரை குத்தக் கூடாது. இந்த அமெரிக்காக்காரன் ஒரு பின் நவீனத்துவக் கொண்டாட்டக்காரன். கூவம் குடிசைங்களுக்கு போய் சுண்டக்கஞ்சி அடிக்குற ஆளு, பெரிய பிலாசபிக்காரர். அவருக்கு என்னோட நாவல் - அதான் இப்போ இங்கிலீசுல வந்திருக்கே, நீங்களும் கேள்விப்பட்டிருக் கணுமே, ஒரே நேரத்துல நியூயார்க், பாரிஸ், சிட்னி, லண்டன்னு எல்லா இடத்துலயும் ரிலீஸ் ஆயிருக்கு. இந்த வருடம் புக்கருக்கு செலக்ட் ஆகும்னு என்னுடைய பாரிஸ் தோழி இப்பதான் மெசேஜ் அனுப்பியிருக்கா. அந்த அமெரிக்கர் என்னோட நாவல் அமெரிக்



படிப்பகம்

www.padippakam.com

கனின் பிராப்ளத்தை ஹார்ட் டு ஹார்ட் பேசுதுன்னு ரொம்ப டீப்பா பீல் பண்ணி ரிசர்ச் பண்றார் (நான்தான் உலக எழுத்தாளன்னு உலகமே ஒத்துக்கிட்ட விசயம். நீ உள்ளூர்ல குப்பை கொட்டிக்கிட்டிருக்க. கற்பூர வாசனை கழுதைக்கு தெரியுமா !)

சு.மோ: அது வந்து பாரு ! இப்ப பாத்தீங்கன்னா எனக்கு மொழி பெயர்ப்புகள் மேலயே பெரிய நம்பிக்கையில்லை. கசந்தகுமார் கூட விஷ்ணுபுரத்த லாங்குவேஜ்ல பெரிய கமாண்ட் உள்ளவங்கிட்ட குடுத்து மொழி பெயர்த்தார். எனக்குத்தான் திருப்தி இல்லை. என்னோட மனவெளி, மொழிபெயர்ப்புல மிஸ்ஸாகுதுன்னு பீல் பண்ணி வேணாம்னு சொல்லிட்டேன். இத இங்கிலீசுல போட்டா பல ஆயிரம் விக்கும்னாங்க. நான் ஒத்துக்கல, என்ன இருந்தாலும் கலையில காம்பரமைஸ் பண்ணக் கூடாது இல்லையா (உன்ன மாதிரி கனிமொழி, அந்துமணி, கமலஹாசன்னு ஜால்ரா போட்டு பிழைக்கறவன் நானில்லை). அப்புறம் புக்கர் பத்தியெல்லாம் எனக்கு பெரிய அபிப்பிராயமில்லை. அருந்ததிராய் படிச்சுருக்கேன், எல்லாம் குருவி மண்டைங்க எழுத்து. வெளிநாட்டு மனநிலையில் நம்ம பண்பாட்டைக் கேலி செய்து எழுதப்பட்டதால வெஸ்டர்ன் மார்க்கெட்ல ஹிட் ஆகலாம்.

பா.நி: உங்க கருத்த அடியோட மறுக்குறேன் சுயமோகன். இலக்கியத்துல வெளிநாடு உள்நாடுன்னு பிரிவினை பிரிக்கிறது பாசிசம்னு நினைக்கிறேன். ஒரு தென்னமெரிக்கனின் கொண்டாட்ட மனநிலையை என்னோட எழுத்து டச் பண்ணுதுன்னு பார்க்குறேன். ஆக்சுவலா நானெல்லாம் பிரேசிலில் பிறந்து, சாக்கர் விளையாடி, சம்பா நடனம் ஆட வேண்டிய ஆளு. ஏதோ இங்க பிறந்து சாம்பார், ரசம்னு விதிக்கப்பட்ட பூமியில சகிச்சுக்கிட்டு வாழறேன். என்னப் பொறுத்தவரை கலைக்கு மொழி கிடையாது. அதோடு கவித்துவமான மொழி எல்லா இடத்துலயும் பாஸாக முடியும். ஏன் என்னையே எடுத்துக்கங்களேன். சுட்டுப் போட்டாக்கூட மலையாளம் எனக்கு வராது.

நீங்களோ மலையாளத்துல கதா கலாட்சபமே நடத்தக்கூடிய ஸ்கில் உள்ளவரு. இப்போ என்னோட புக்ஸ் எல்லாமே மலையாளத்துல ரீலீஸ் ஆகி மாதத்துல பாதி நாளு கடவுளோட சொந்த தேசத்திலதான் சுத்திக்கிட்டு, புட்டு, பயிறு, பப்படம்னு ஆயிட்டுது வாழ்க்கை. கேரளாவுல 88 இடத்துல எனக்கு கட் அவுட் வைச்சுருக்காங்க. மோகன்லால், மம்முட்டிக்கு அடுத்த இடத்துல நான்தான்னு சொல்றாங்க. இதெல்லாம் பெரிய விசயம்னு நானும் எடுத்துக்கல.



படிப்பகம்

www.padippakam.com

நான் சொல்ல வர பாயிண்டு இலக்கியத்துக்கு மொழி ஒரு ஒப ணிங்தான் (மலையாளத்துல நான்தான் சூப்பர் ஸ்டாருன்றது தெரிஞ்சு நீ எத்தனை நாள் தூங்காம இருந்தேன்னு உன் அறுவைகளை வேறு வழியில்லாமல் படித்து ஃபுரூப் பாக்கும் உன் மனைவியிடம் கேட்டால் உண்மை தெரியும்).

சு.மோ: (சற்று பதட்டமடைந்து) ஐயோ பாரு ! கேரளாவோட நிலைமையே வேறு. அங்க மரபு ரீதியான எழுத்துக்களுக்கு மத்தியில ஒரு ரீலீஃபாத்தான் உங்களைப் பாக்குறாங்கன்னு கிருஷ்ணன் குட்டி கூட சொல்லிட்டிருந்தார். இதப்பத்தி நானும் நிறைய எழுதியி ருக்கேனே ! நம்ம தமிழ்ல இருக்குற நவீன எழுத்தெல்லாம் அங்க அதிகமில்லை. ஒரு மாதிரி பாப்புலர் லெவல்லதான் சீரியஸ் லிட்ட ரேச்சர் இயங்குறதால அதுவே அவங்களுக்கு ஒரு தடை ஆயிடு தில்ல ! மத்தபடி நீங்க மலையாளத்துல என்ட்ரி ஆனது எனக்குக் கூட பரவசமான மனநிலையைத்தான் குடுத்திருக்கு. பாலாவுக்கு வசனம் எழுதிக்கிட்டிருக்கிறப்போ கேரளாவோட ரசனை பற்றி ஒரு பெரிய டிஸ்கஷன் பண்ணினோம். நீங்க சொன்ன உடன இப்போதான் மெம ரிக்கு ஸ்ட்ரைக் ஆகுது.

(சினிமாவுக்கு நான் வசனம் எழுதுறதப் பத்தி நீ மனம் நொந்து எத்தனை நாள் பார்க் ஷெர்ட்டன்ல சரக்கடிச்சேன்னு அந்துமணி கிட்ட கேட்டாத்தான் தெரியும் ! அவிடே பிராந்தனக்க சாகித்யக்கா ரனானு கேட்டோ).

பா.நி: (அதேபோல பதட்டமடைந்து) இல்ல சுயமோகன் .. சினி மாவில தீவிர இலக்கியவாதிகளுக்கு இடமுண்டான்னு தெரியலை. ஆரம்பத்துல நீங்களும், மெஸ்.கிராமகிருஷ்ணனும் எழுதறதப் பத்தி, போஸ்டர்ஸ்ல உங்க பெயர் பாத்துட்டு கூத்தாடியிருக்கிறேன். ஆனா நம்மள ஒரு காண்டம் மாதிரி அவங்க யூஸ் பண்ணிக்கிட்டு த்ரோ பண்ணிடுவாங்க. ஏதோ பணம் கொஞ்சம் கிடைக்கலாம் .. ஆனா ரியல் சேட்டிஸ்பேக்ஷன் அங்க கிடைக்காதுன்றதுதான் என்னோட ஸ்ட்ராங்கான ஃபீலிங்.

சு.மோ: அலோ .. ஏதோ கேரளாவில சில அரைக்கிராக்குங்க உன்னைச் சுத்தி வருதுன்னு ரொம்ப ஆடாத ! தமிழ் நாட்டுல குழாயில தண்ணி வரலேன்னா கூட கவலைப்படாத ஷோக்குப் பேர்வழி, இலக்கிய ★:×÷% .. கேரளாவில விவசாயிகளுக்காக கோகோ கோலாவ எதிர்த்துப் போராட மாதிரி சீன் காட்டுற !



படிப்பகம்

பா.நி: நிறுத்துடா. ★꞉×÷% ஏதோ ரெண்டு சினிமாவுல ஐஞ்சு தயிர்ச்சாத கேரக்டருக்காக வாந்தி எடுத்துட்டு காசு பொறுக்கினு வர ஆளு நீ. என்மேல உனக்கு காண்டு, கொலைவெறிங்குறத ஒத் துக்கடா! என் பிளாக்குக்கு டெய்லி பத்தாயிரம் ஹிட்ஸ் தெரியுமாடா .. பெரிசா பேச வந்துட்டான் ★꞉×÷%

சு.மோ: ஐயோ உன் ஹிட்ஸ் கதைதான் நெட்டுல நாறுதே. வியூஸ் எல்லாம் ஹிட்ஸ்னு கள்ளக் கணக்கு காட்டிட்டு, அதுக்கு துட்டு கேட்டு கேவலப்பட்டு, அப்புறம் ஒரு நாயும் படிக்க மாட்டான்னு பிச்சை கேக்குற. உன்னை மாதிரி நான் ★꞉×÷% இல்லைடா! மானம் கெட்டவனே!

பா.நி: நிறுத்துடா ★꞉×÷% . டெய்லி அஞ்சாறு பதிவு போடுற மெஷின்.. நீயெல்லாம் வொர்க்ஷாப் வெச்சு பிழைக்க வேண்டி யவன், கவர்மெண்டு காசுல வாழ்ந்துட்டு அதுவும் பணி நேரத்துல தூங்குறேன்னு அதையும் வெக்க மானமில்லாம பிளாக்ல எழுதிட்டு, ஏதோ கீதை, பேதைன்னு ரீல் விட்டுட்டு காலத்த ஓட்டற ★꞉×÷% நான்சென்ஸ். இலக்கியத்தை நம்பி என்னை மாதிரி வி.ஆர்.எஸ் வாங்க தைரியம் இருக்காடா உனக்கு?

சு.மோ: போடா ★꞉×÷%

பா.நி: போடா ★꞉×÷%

இதற்கு மேல் இவர்கள் என்ன பேசிக் கொண்டார்கள் என்பது காதில் விழவில்லை. கேட்டவர்கள் பின்னூட்டத்தில் அவற்றைப் பதிவு செய்யலாம்.

●●●



படிப்பகம்

www.padippakam.com

## நவ்வாப்பழம்: ஜெயமோகனுடன் ஒரு தத்துவ விசாரம்!

தனது நாவல்களின் வாயிலாக கலர் கலரான தத்துவ தரிசனங்களை வாசககர்களுக்குக் காட்டியிருக்கிறார் ஜெயமோகன். அந்த தரிசனங்கள் தோற்றுவித்த புல்லரிப்பிலிருந்து மீளாதவர்களும், பிரமிப்பில் உறைந்து அதன் பின் உருகி சகஜநிலை அடைய முடியாதவர்களும் பலர். ஒரே இரவில் சுந்தர ராமசாமியைப் பற்றி ஒரு புத்தகம் எழுதக்கூடியவரும், தூக்கத்தில் எழுப்பிக் கேட்டாலும் டால்ஸ்டாயையும் தஸ்தாவ்ஸ்கியையும் தலைகீழாக ஒப்பிக்கக் கூடியவருமான ஜெயமோகனிடம் இலக்கிய விசாரம் நடத்தும் தகுதி நமக்கு இல்லை. யாரொருவருடனும் ஒரு விசயம் பற்றிக் கதைக்க வேண்டுமென்றால் கதைக்கப்படும் பொருள் குறித்து கடுகளவேனும் நமக்குப் பரிச்சயம் இருக்க வேண்டும். அந்த வகையில் நமக்குப் பரிச்சயமான 'நாவல்' பற்றி ஜெயமோகன் எழுதியிருப்பதைத் தற்செயலாக அவரது இணைய தளத்தில் கண்டோம். எனவே அது குறித்து எழுதும் துணிவு கொண்டோம்.

இனி, பூர்வபட்சம். அதாவது ஜெயமோகனின் கூற்று:

விஷ்ணுபுரத்திலும், கபாலபுரத்திலும், ஸ்டாலின்கிராடிலும், சங்ககாலத்திலும் மனவெளி உலா வந்த ஜெயமோகன், அங்கிருந்து இறங்கி நாகர்கோவிலில் தன் மகனுடன் ஒரு மாலை நேர உலா செல்லுகையில் ஒரு பழக்கூடையில் நாவலைக் காண்கிறார். நாவல்



படிப்பகம்

www.padippakam.com

என்று நினைத்தீரோ வாசகரே, அது நவ்வாப்பழம்! நம்மைப் போன்ற சாதாரணர்களுக்குத் தெரிந்த சுவை அதுதானே!

ஆசையுடன் ஒரு பழத்தை வாயில் போட்டு சுவைக்கிறார். வியா பாரியிடம் விலை கேட்கிறார். கிலோ நூறு ரூபாய்!

விலை தோற்றுவித்த அதிர்ச்சி நாகர்கோவில் தெருவிலிருந்து ஜெயமோகனை அவருக்குப் பரிச்சயமான மனவெளியை நோக்கித் தூக்கி எறிகிறது. நாவல் காடு, அங்கே காய்த்துத் தொங்கும் கனி களைச் சும்மா பறித்து தின்ற நினைவுகள்.. பிறகு மீண்டும் நாகர் கோவில்.

ஒரு கிலோ நூறு ரூபாய் என்றால் நூறு கிராம் பத்து ரூபாய். எனில் ஒரு பழம் ஒரு ரூபாய். அந்த ஒரு பழத்தில் கொட்டையைக் கழித்துவிட்டால் எஞ்சியிருக்கும் சுளைக்கு இத்தனை விலையா? நாக்கில் நாவலின் சுவையும் மனதில் வலியுமாக வீடு திரும்புகிறார் ஜெயமோகன்.

இரண்டு நாட்கள் கழித்து ''கூடை நாவல் பழத்தை நூற்று ஐம்பது ரூபாய் விலைக்கு ஒரு வியாபாரியிடம் விற்ற கதையை'' ஒரு ஏழை விவசாயி ஜெயமோகனிடம் விவரிக்கிறார். ''ஒரு கூடை என்பது 20 கிலோ. அப்படியானால் ஒரு கிலோ ஏழு ரூபாய்க்கு வாங்கி 100 ரூபாய்க்கு விற்கப்படுகிறதா?'' உடனே ஜெயமோகனுக்கு மூளையில் பல்பு பற்றி எரிகிறது.

மொத்த வியாபாரி முதல் தள்ளுவண்டி வியாபாரி ஈறான காய்கறி வியாபாரிகளெல்லாம் சிண்டிகேட் அமைத்து விலை நிர்ணயம் செய் வதால் விவசாயிகளுக்கு நியாயவிலை கிடைப்பதில்லையாம். இப்படி உள்ளூர் சந்தைகளை ஆதிக்கம் செய்யும் நபர்கள் ரவுடிகளா கவும் இருக்கிறார்களாம். இவர்களது கொள்ளைப்பணம் அரசியல் கட்சிகளுக்கும் போவதால் கட்சிக்காரர்கள் இவர்களை ஆதரிக்கி றார்களாம். இதற்கு ஜெயமோகன் சிபாரிசு செய்யும் விமோசனம் - ரிலையன்ஸ் பிரஷ்.

முகேஷ் அம்பானி எட்டு மடங்கு விலை கொடுத்து விவசாயிக ளிடம் வாங்கி நுகர்வோருக்கு மலிவான விலையில் விற்பனை செய் கிறாராம். ரிலையன்ஸ் பல இடங்களில் காய்கறி சிண்டிகேட்டை



படிப்பகம்

www.padippakam.com

நடுங்க வைத்திருக்கிறதாம். அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, நக்சலைட்டு தோழர்களும் ரிலையன்சை எதிர்க்கிறார்களாம். இதனாலேயே மதுரையிலும், ஊட்டியிலும் கொள்முதல் நிலையங்களை ரிலையன்சு மூடிவிட்டதாம். இதையெல்லாம் ஜெயமோகனிடம் அவரது பத்திரிகை நண்பர்கள் தெரிவித்தார்களாம்..

ஒரு நவ்வாப்பழத்தை மையமாகக் கொண்டு விரிந்த இந்த உண்மைகள் ஜெயமோகனிடம் தவிர்க்க முடியாதபடி அதீத மனத்தாவலைத் தூண்டுகின்றன. இதோ, நாவல் மரத்தின் கீழே தத்துவஞானத்தின் ஒளி பரவத் தொடங்குகிறது.

''முதலாளித்துவ வளர்ச்சிதான் விவசாயிகளின் துன்பங்களைத் தீர்க்கும். காரல் மார்க்சே முதலாளித்துவம் என்பது நிலப்பிரபுவத்தைவிட பல மடங்கு முற்போக்கானது என்று சொல்லியிருக்கிறார். தனியார் மயத்தை எதிர்ப்பது அசட்டுத்தனம். நான் வேலை பார்க்கும் தொலைபேசித் துறையிலேயே பத்து வருடங்களுக்கு முன்னர் தனியார் மயத்தை கடுமையாக எதிர்த்தோம். வேலை போய்விடும் என்று பயந்தோம். தற்போது என்ன நடந்திருக்கிறது? பல செல்பேசி கம்பெனிகள் வந்திருப்பதால் தொலைபேசிக் கட்டணம் பல மடங்கு குறைந்துவிட்டது. எனவே விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்றால் ரிலையன்சு பிரஷ்ஷும், முதலாளித்துவ வளர்ச்சியும்தான் தீர்வு. இதை ஒரு பொருளாதார அறிஞராக இருந்து சொல்லவில்லை. ஒரு எளிய மனிதனின் பார்வையில் படும் விசயமாகக் கூறுகிறேன்'' என்று பணிவுடன் தனது தரிசனத்தை விளக்குகிறார் ஜெயமோகன்.

மிகவும் எளிய வாசககர்கள் புரிந்து கொள்ளும்படி சொல்வதென்றால், ''அம்பானியும் பிர்லாவும் நவ்வாப்பழ வியாபாரத்தில் இறங்காத வரையிலும் நாடு உருப்படாது'' என்கிறார் ஜெயமோகன்.

இதென்ன, ''ரயில் லேட்டாக வந்தால் எமர்ஜென்சி வர வேண்டும், பஸ் கண்டக்டர் பாக்கி சில்லறை கொடுக்காவிட்டால் தனியார்மயம் வரவேண்டும் என்று பேசும் ஊசிப்போன நடுத்தர வர்க்க ஜென்டில்மேன்களின் உளறலைப் போல இருக்கின்றதே'' என்றோ, '' ஸ்ரீமான் சோ ராமஸ்வாமியின் அபிப்ராயங்களைப் போலவே இருக்கின்றதே'' என்றோ வாசகர்கள் கருதிவிடக் கூடாது.

www.padippakam.com

இதெல்லாம் தத்துவஞானிகளுக்கே உரிய பிரச்சினை.

''பிரம்ம ஸத்யம் ஜகன் மித்யா'' என்று உபதேசித்த ஆதிசங்கரனிடம் ''அப்புறம் எதுக்கு தெனம் சோறு திங்கிறாய்?'' என்று ஒரு பாமரன் கேட்டானாம். ''இதென்னடா நியூஸென்ஸ். அதெல்லாம் வியவகாரிக சத்யம்'' என்று புறங்கையால் அந்தப் பாமரனின் வாதத்தை ஒதுக்கித் தள்ளினாராம் அந்த தத்துவஞானி.

''திங்கிற சோத்துக்கும் நம்ம தத்துவஞானத்துக்கும் என்ன சம்மந்தம்?'' என்ற கேள்வி எழ முடியாத அளவுக்கு சிந்தனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த சங்கரனைப் போலவே, மாதாமாதம் கைநீட்டி காசு வாங்கும் பி.எஸ்.என்.எல் நிறுவனத்துக்கும் தனது தனியார்மயத் தத்துவத்துக்கும் என்ன சம்மந்தம் என்பது பற்றி ஜெயமோகனுக்கும் தெரியவில்லை.

தெரியவேண்டியதில்லையே! காலங்களைக் கடந்து மனவெளியில் சஞ்சரிக்கும் ஒரு மனிதனுக்கு, தண்டி தண்டியாக இலக்கிய உன்னதங்களை உமிழ்ந்து கொண்டிருக்கும் ஒரு இலக்கியவாதிக்கு, தினத்தந்தி பேப்பரில் என்ன வந்திருக்கிறது என்ற விவரமோ, தனக்குப் படியளக்கும் துறையில் என்ன நடக்கிறது என்ற விவரமோ எப்படித் தெரிந்திருக்க முடியும்?

அதெல்லாம் நம்மைப் போன்ற சாதாரணர்களுக்குத் தெரிந்த விவரங்கள். இலக்கியத் தரமோ சுவையோ அற்ற, வலதுசாரி இடதுசாரி சார்பும் அற்ற அந்த உண்மை விவரங்கள் வருமாறு:

தனியார் வந்ததனால் செல்பேசிக் கட்டணம் குறைந்ததாம்! கழுதைக்கு கல்யாணம் செய்து வைத்ததால் மழை பொத்துக் கொண்டு ஊத்தியதைப் போல! தேவையான தொழில்நுட்பம் பி.எஸ்.என்.எல் இடம் இருந்தபோதும், செல்பேசித் துறையில் நுழையவிடாமல் பி.எஸ்.என்.எல் தடுக்கப்பட்டது. தனியார் மட்டுமே கொள்ளையடிக்க ஒதுக்கப்பட்ட அந்த காலகட்டத்தில், ரம்பா, மீனா, ரோஜா போன்ற பில் கட்டத் தேவையில்லாத ஏழை நடிகைகள் நிமிடத்துக்கு 10 ரூபாய் ரேட்டில் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது இன்கமிங் காலுக்கும் பில் இருந்தது. அது 'கொற்றவை'யின் காலமல்ல. காங்கிரசு, பாரதிய ஜனதா ஆட்சிக்காலம். அம்பானியின் அருமை


படிப்பகம்

www.padippakam.com

நண்பரான பிரமோத் மகாஜன் அரசுத் தொலைபேசியை பாயின்ட் பிளான்கில் சுட்டுக் கொன்ற காலம் அது.

பிறகு ஆத்தமாட்டாமல் வந்தது அரசு தொலைபேசி. அதன் காலை உடைப்பதற்கு டிராய் என்ற கட்டைப் பஞ்சாயத்து அமைப்பு தயாராக இருந்த்து. அரசுத் தொலைபேசியின் கட்டுமானங்களைப் பயன்படுத்திக் கொண்டு அதற்குப் பணம் கொடுக்காமல் டிமிக்கி கொடுத்தார்கள் முதலாளிகள். ''அரசுக்கு லைசன்ஸ் கட்டணம் தரு கிறோம்'' என்று ஒப்புக்கொண்டு அதற்கும் நாமம் போட்டார்கள். ''கிராமத்துக்கு தொலைபேசி வசதி செய்து தருகிறோம்'' என்று கையெழுத்துப் போட்டுவிட்டு, ''முடியாது'' என்று கைவிரித் தார்கள்.

இதெல்லாம் போதாதென்று நவ்வாப்பழத்துக்கு எட்டு மடங்கு விலை கொடுக்கப்போகும் அம்பானி, பி.எஸ்.என்.எல் ஐ ஏமாற்றி அமெரிக்காவுக்கு திருட்டு கால் கொடுத்தார். 1500 கோடி சுருட் டினார். இ.பீ.கோ 124-ஏ, 120-பி இன் கீழ் ஆயுள்தண்டனை தரத்தக்க அந்த குற்றத்தை மன்னித்தது காங்கிரசு அரசாங்கம். பாதி காசு வாங்கிக் கொண்டு 'அவுட் ஆப் கோர்ட் செட்டில்மென்ட்' செய்து கொண்டார் தம்பி தயாநிதி மாறன். தன்னுடைய செல்பேசி ஏஜென் டுகளுக்கே அம்பானி சகோதரர்கள் அல்வா கொடுத்தது தனிக்கதை.

சென்னை மாநகரில் கண்ணாடி இழைக் கேபிள் இழுக்க எங்கே வேண்டுமானாலும் தோண்டிக் கொள்ளுங்கள் என்று ஜெயமோ கனின் அபிமான தனியார் முதலாளிகளுக்கு லைசன்ஸ் கொடுத்தது திமுக மாநகராட்சி. இதில் 1300 கோடி இழப்பு என்று துக்ளக்(கே) எழுதியது. இதுவும் போதாதென்று சிண்டிகேட் அமைத்துக் கொண்டு, அதிகாரிகள் அமைச்சர்கள் ஆதரவுடன் பி.எஸ்.என்.எல் கம்பிகளை ஆள் வைத்து அறுத்தார்கள் முதலாளிகள். அதை எதிர்த்து சென்னை தொலைபேசி ஊழியர்கள் போராட்டம் நடத்தினார்கள்.

லாபகரமாக நடந்துகொண்டிருந்த விதேஷ் சஞ்சார் நிகாமின் (VSNL) பங்குகளை அதன் ரியல் எஸ்டேட் சொத்து மதிப்புக்கும் குறைவான விலையில் டாடாவுக்கு தாரை வார்த்தார் பிரமோத் மகாஜன். தன்னுடைய கட்டுப்பாட்டில் வந்தவுடனே, VSNL கல் லாவில் இருந்த ரொக்கத்தை வைத்து, மூழ்கிக் கொண்டிருந்த டாடா டெலிகாமின் பங்குகளை அதிக விலைக்கு வாங்கி தனது



படிப்பகம்

www.padippakam.com

கம்பெனியைத் தூக்கி நிறுத்தினார் டாடா. இப்போது அமர்சிங்கின் ஒப்பந்தப்படி அனில் அம்பானிக்காக ஸ்பெக்ட்ரம் எனப்படும் ரேடியோ அலைவரிசையை ஒதுக்குவதற்குத் தோதாக கட்டணத்தை மலிவாக மாற்றப்போகிறார்கள்.

இது செல்பேசி கதை. பெட்ரோல் கதை தனி. பாலியெஸ்டர் கதையை ஏற்கெனவே அருண்ஷோரியும் குருமூர்த்தியும் எழுதியிருக்கிறார்கள். ஹமிஷ் மெக்டொனால்டு என்ற ஆஸ்திரேலிய பத்திரிகையாளர் எழுதிய பாலியெஸ்டர் பிரின்ஸ் என்ற அம்பானி பற்றிய நூலை இந்தியாவுக்குள்ளேயே வரவிடாமல் தடுத்துவிட்டார்களாம் அம்பானிகள். ரசியாவில் தடைசெய்யப்பட்ட, ஸ்டாலின் காலம் குறித்த நூல்களையெல்லாம் தோண்டிக் கண்டுபிடித்த ஜெயமோகனின் கண்ணில் இந்த நூல் படவில்லை போலும்! அம்பானியின் பிளாஸ்டிக் ஏகபோகத்தால் அழிந்த சிறு உற்பத்தியாளர்கள் சமீபத்தில் தமது வயிற்றெரிச்சலை தினமணியில் விளம்பரமாகவே வெளியிட்டிருந்தார்கள். ரிலையன்ஸ் பிரஷ்ஷால் பாதிக்கப்பட்ட சிறுவணிகர்கள் நாடு முழுவதும் போராடுகிறார்கள்.

உண்மை விவரங்களை இத்துடன் முடித்துக் கொள்வோம்.

உண்மை என்ற சொல்லே விவாதத்துக்குரியதாயிற்றே! ''தெய்வம் என்றால் அது தெய்வம், வெறும் சிலை என்றால் அது சிலைதான். உண்டென்றால் அது உண்டு, இல்லை என்றால் அது இல்லை. பார்க்கின்ற பார்வையில்தான் இருக்கிறது விசயம். நிலப்பிரபுத்துவத்தை விட முதலாளித்துவம் முற்போக்கானது என்று மார்க்ஸே சொல்லியிருக்கிறார்'' என்கிறார் ஜெயமோகன்.

வறுமையோ, பட்டினியோ, படுகொலையோ கூட யாரையும் மார்க்சிஸ்டாக மாற்றிவிடுவதில்லை. ஜெயமோகனுடன் பழகிய சிபிஎம், சிபிஐ தலைவர்களாலேயே கூட அவரை மார்க்சியவாதியாக மாற்ற முடியவில்லை. மனிதர்களால் சாதிக்க முடியாத இந்தக் காரியத்தை கேவலம் ஒரு நவ்வாப்பழம் சாதித்துவிட்டதே!

இருப்பினும், நவ்வாப்பழத்தால் அறிவொளியூட்டப்பட்ட ஜெயமோகனின் மார்க்சிய அறிவு ''சுட்டபழம் சுடாத பழம்'' ரேஞ்சில் இருப்பதால் நாம் அதற்குள் இறங்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

ஒரு இலக்கியவாதியின் இளகிய மனம், கேவலம் ஒரு நவ்வாப் பழத்துக்காக நாலு கோடி சிறுவணிகர்களை கொல்லத் துணிகிறதே, அதை நினைக்கும்போதுதான் நெஞ்சு நடுங்குகிறது.

வீடு, நிலத்தை விற்று மஞ்சள் பையுடன் சென்னை வந்து, குடும்பத்தோடு மளிகைக் கடையிலேயே குடியிருக்கும் இலட்சக் கணக்கான அண்ணாச்சிகளோ, அவர்களின் சங்கத்தலைவர் வெள்ளையனோ ரவுடியல்ல. முதலாளிகளின் கொள்ளைக்காக பருத்தி கொள்முதல் விலை குறைக்கப்பட்டதால்தான் விதர்பாவின் விவசாயிகள் தற்கொலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று ஒவ்வொரு தற்கொலைக்குப் பின்னாலும் மறைந்திருக்கும் வாழ்க்கையை கதையாக வழங்கிக் கொண்டிருக்கும் சாய்நாத்தும், அம்பானியின் கோதுமைக் கொள்முதலால் தற்கொலைக்குத் தள்ளப்பட்ட பஞ்சாப் விவசாயிகளைப் பற்றி எழுதும் வந்தனா சிவாவும் நக்சலைட்டுகள் அல்ல.

இவையெல்லாம் ஜெயமோகனுக்குத் தெரியாத உண்மைகளும் அல்ல. எனினும் ஒரு நவ்வாப்பழத்தின் விலை அவரது இதயத்தில் தோற்றுவித்த வலி, நவ்வாப்பழ பிரின்ஸ் என்றொரு நாவல் எழுதும் அளவுக்கு அவரை வெறி கொள்ளச் செய்திருக்கிறது. அவரது இதயத்தில் தோன்றிய வலி, விவசாயிக்குக் கிடைக்கும் விலையை அறிந்ததால் வந்ததல்ல என்பதை அவரது செல்போன் சிலாகிப்பைப் படித்தாலே உணர்ந்து கொள்ள முடியும்.

ஜெயமோகன் ஒரு கம்யூனிச எதிர்ப்பாளர் என்பதோ, மார்க்சியவாதி அல்ல என்பதோ நமது பிரச்சினை அல்ல. இப்பிரச்சினையின் நியாயத்தைப் புரிந்து கொள்வதற்கு ஒருவர் பொருளாதார அறிஞராக இருக்கவேண்டிய அவசியமும் இல்லை. எளியாரை வலியார் ஏறி மிதிக்கும் அநீதியைக் கொள்கை பூர்வமாக நியாயப்படுத்தும் ஒரு பாசிஸ்டைக் காட்டிலும் அதனை மனப்பூர்வமாக வழிமொழியும் இலக்கியவாதி ஆபத்தானவன்.

மனித மனத்தின் இருட்குகைக்குள் டார்ச் அடித்து, உண்மைக்கும் பொய்க்கும் அப்பாற்பட்ட ஒன்றை, அறிவுக்கும் அனுபவத்துக்கும் சிக்காத ஒன்றைத் தேடுவதாகப் பம்மாத்து செய்து, அந்தப் போலி மன அவஸ்தைக்குத் தனது வாசகர்களையும் ஆட்படுத்தும் வித்தை தெரிந்த ஒரு எழுத்தாளன், இதோ அம்மணமாக நிற்கிறான்.



படிப்பகம்

www.padippakam.com

இந்த எழுத்து மனம், கூடு விட்டுக் கூடு பாய்ந்து எந்தெந்தப் பாத்திரங்கள் வழியாக என்ன பேசியது, அவற்றில் உங்களைக் கவர்ந்தவை எவை என்பதை மீளாய்வு செய்வதும் மறுவாசிப்பு செய்து பார்ப்பதும் ஜெயமோகன் ரசிகர்களுக்கு அவ்வளவு உவப்பானதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் ரசனை என்ற சொல்லைப் பயன்படுத்துவோர் யாரும் இதனைத் தட்டிக் கழிக்க முடியாது.

''எனக்கு சோன் பப்டி பிடிக்கும், ஜெயமோகனும் பிடிக்கும்'' என்று கூறும் ருசிகர்களைப் பற்றி பிரச்சினையில்லை. ஜெயமோகனுக்குக் கூடத்தான் நவ்வாப்பழம் பிடிக்கும். 'அது ஏன்' என்று நாம் கேட்க முடியுமா என்ன?

(இந்தக் கட்டுரையை உரிய மூளைகளில் உள்ளீடு செய்வது வாசகர்களின் விருப்பம்).

●●●



படிப்பகம்

www.padippakam.com

## மொக்கைப் பதிவு உடல் நலத்திற்குக் கேடு!

''மொக்கைப் பதிவு என்பது யாதெனின்'' என்று துவங்கும் குறளை வள்ளுவர் எழுதவில்லை. அது கணினியோ இணையமோ பதிவர்களோ இல்லாத காலம். ஓலைச் சுவடியின் மீது எழுத்தாணியால் கீறத் தெரிந்தவர்களெல்லாம் 'வலையேற்றம்' செய்யும் வாய்ப்பு அன்று இல்லை; இன்று இருக்கிறது.

'காலம் கெட்டுப் போச்சு' என்று புலம்பும் இலக்கிய சநாதனிகள் இல்லை நாங்கள். எனினும், ''கல்வியறிவு வாழ்க! கருத்துச் சுதந்திரம் வாழ்க! மொக்கைப் பதிவும் வாழ்க!'' என்று எங்களால் கூவ முடியவில்லை.

தமிழ் மணம் தளத்தின் நட்சத்திரப் பதிவில் ஏறியவுடன், ''எம்மைத் தவிர அனைவரும் மொக்கைகளே'' என்று உலகுக்கு அறிவிக்கும் நவீன இலக்கிய தாதாக்களும் நாங்கள் இல்லை.

நாங்கள் என்ன தரம், என்ன ரகம் என்பதைப் பதிவுலகம் கூறட்டும். நாம் ''மொக்கைப் பதிவென்பது யாது?'' என்ற தத்துவஞானக் கேள்விக்கு மட்டும் விடை காண முயல்வோம். இது குறித்த முன்னோடி ஆய்வுகளைப் பல பதிவர்களும் செய்திருக்கிறார்கள் எனினும் அந்த ஆய்வுக் கடலில் 'வினவு'ம் ஒரு துளியாகச் சேர வேண்டாமா?

முன்னொரு காலத்தில் அருந்ததி ராயும், ஜெயம்பாலகரியும் சொந்தமாய்க் கணினி வாங்கி, அதில் எந்தத் திட்டமுமில்லாமல் தட்டத் தொடங்கினார்களாம். பிறகு தட்டியவைகளைச் சேர்த்துக்



படிப்பகம்

www.padippakam.com

கட்டியபோது அது நாவலாகி விட்டதாம். புக்கர் பரிசும் பெற்று விட்டதாம். எல்லாம் அவர்கள் சொன்னதுதான். எழுத்தாணி படித்த வனெல்லாம் வள்ளுவனாக முடியாது என்பது போல தட்டத் தெரிந்த அம்பிகளெல்லாம் அருந்ததி ராயும் ஆக முடியாது. இது தெரிந்த விசயம்.

என்றாலும் கையெழுத்துப் பத்திரிகை, உருட்டச்சு பத்திரிகை, சிறு பத்திரிகை அப்புறம் குமுதம், ஆனந்தவிகடன் என்று படிப்ப டியாக 'உழைத்து முன்னேறிய' எழுத்தாளர் பெருமக்கள் பார்த்துப் பெருமூச்செறியும் வகையில் 'இன்று எங்கெங்கு காணினும் பதிவ ரடா' என்கிற நிலை. இந்தியா இலங்கை சிங்கப்பூர் மலேசியா முதலிய நாடுகளில், கோபால் பல்பொடியைத் தோற்கடிக்கும் விதத்தில், ஒரே நேரத்தில் சர்வதேச வாசகர்கள் படிப்பதைக் கணி னியில் பளிச்சிடும் உலக வரைபடத்தின் நட்சத்திரங்கள் காட்டு கின்றன. எல்லாப் பதிவர்களையும் 'உலக நாயகனே.. எழுது.. எழுது..' என்று உந்தித் தள்ளுகின்றன.

டாஸ்மாக் - சுண்டக்கஞ்சியைக் காட்டிலும் வலியது இந்த ஹிட்ஸ் போதை. ''நீ மட்டும் முற்றும் துறந்த முனிவனா?'' என்று கேட்காமல் பொறுமையாகப் படியுங்கள். எழுதுபவர்களின் நோக்கமோ, திறமையோ எழுத்துக்கான உந்துதலாக இல்லாமல், மேற்படி 'போதையே' உந்துவிசையாக மாறிவிடுகின்ற அபாயக ரமான தருணத்தில்தான் மொக்கை அவதரிக்கிறது.

புகழ் பெற்ற வலைப்பதிவர்களுக்கு வரும் ஹிட்ஸூம், புல் அரிக்கவைக்கும் கும்மிகளும் 'நாமும் அது போல ஆக மாட்டோமா' என்று பதிவர்களின் சிந்தனையை அரிக்க ஆரம்பிக்கிறது. என்ன எழு துவது, என்ன தலைப்படுவது என்பதை தமிழ் மணம் 'சூடான இடு கை'யில் இடம் படிக்கும் 'நோக்கமே' தீர்மானிக்கிறது. விளைவு - தினமலர் போஸ்டர் தந்திரம். பதிவேற்றிவிட்டு ஹிட்சுக்காக காத்தி ருப்பது, உலக வரைபடத்தை விரித்து வைத்துக் கொண்டு ஒளிரும் நட்சத்திரங்களுக்காக ஏங்குவது, மறுமொழி போடுபவர்கள் ஒவ் வொருவருக்கும் நன்றி சொல்லி, நன்றி கூறலையே மறுமொழி எண் ணிக்கையைக் கூட்டும் தந்திரமாக்குவது, தனக்குப் பின்னூட்டம் போடும் பதிவர்களுக்கு மட்டும், அவர்கள் போட்ட பின்னூட்டம் எத்தனை ரூவாயோ அதே அளவுக்கு மொய் எழுதுவது, விமரிசிப்ப வர்களின் வலைப்பதிவில் அனானியாகச் சென்று இறங்கி



படிப்பகம்

www.padippakam.com

மொட்டைக் கடுதாசியைச் செருகுவது.. என்று எல்லா வகைத் தந்தி ரங்களையும் கீழ்மைகளையும் பதிவர்களுக்கு வலையுலகம் கற்றுத் தருகிறது.

படிப்பவர்களும் பதிவர்களுக்குக் கற்றுத் தருகிறார்கள். ஷகீ லாவும் பர்தாவும் பெண்ணினத்தை இருபுறமும் தாக்குவது பற்றி நாங்கள் ஒரு பதிவு எழுதினோம். ஷகீலா என்ற சொல்லைப் பயன்ப டுத்தியதுதான் நாங்கள் செய்த பாவம். இன்றைக்கும் பலான நோக் கத்துக்காக ஷகீலாவைத் தேடும் பக்தர்கள் சிலர் கூகிள் வழியாக 'வி னவு' க்குள் இறங்கி, ஏமாந்து, மனதுக்குள் கெட்டவார்த்தை சொல்லி திட்டிவிட்டுப் போகிறார்கள்.

மெய் உலகம் எப்படி இருக்கிறதோ, அப்படித்தானே இருக்கும் மெய் நிகர் உலகம்? ஜெயலலிதா கட் அவுட்டுகள், பூப்பு நீராட்டு விழா போஸ்டர்கள், ஊட்டியில் டூயட் பாடும் திருமண வீடியோ மிக் சிங்குகள் ஆகியவற்றால் நிரம்பியதன்றோ நமது மெய்யுலகம்! இதன் பிரதியான மெய்நிகர் உலகில் ஜெயமோகனின் சுற்றுலா ஆல்பமும், சாருநிவேதிதாவின் பாரிஸ் பாரும் பதிவுகளின் சைடு பாரில் 'என்னைப் பார் யோகம் வரும்' என்று இளிக்கின்றன. கட் அவுட் வைத்து விளம்பரம் தேடினால் காசு, பிளாக்கில் போட்டால் ஓசிதானே!

இப்படி எந்த விதமான கருத்துடனோ, கொள்கையுடனோ கூடாமல், 'இயற்கைக்கு விரோதமான முறையில்' சுய இன்பர்கள் பெற்றெடுப்பவையே மொக்கைகள் என்று பொதுவாகக் கூறலாம்.

பதிவர்களின் எழுத்தூக்கத்தையும் ஆர்வத்தையும் கருக்குவது எம் நோக்கமல்ல. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இரகசியமாக ஓட்டுப் போடுவது என்ற முறையில் அல்லாது வேறு விதத்தில் தமது கருத்துரிமையைப் பயன்படுத்தத் தெரியாத மக்கள் நிரம்பிய நாட்டில், ஒரு கருத்தைக் கூறவும், விவாதிக்கவும் முன்வரும் எந்த முயற்சியும் வரவேற்கத் தக்கதே.

ஆனால் சொல்வதற்கு அப்படி ஒரு கருத்து இருக்க வேண்டுமே!

தீபாவளித் திருநாளன்று பல் விளக்காமல் குலோப் ஜாமூன் சாப் பிட்டது, பிள்ளைக்கு எண்ணெய் ஸ்நானம் செய்வித்தது, அய் யங்கார் மனைவி இறால் குஞ்சில் இட்லிப் பொடி செய்து தந்து



படிப்பகம்

www.padippakam.com

நெகிழ்வித்தது, ஜட்டி தெரியும்படியாக பாண்ட் அணிந்து கல்லூரி மாணவிகளின் இதயத்தை ஊடுருவியது போன்றவையெல்லாம் தேடிக்கிடைக்காத அனுபவங்களாக இணையத்தளங்களில் முன் மொழியப்படும்போது, பாரிசை சென்னை டாவடித்த அக்கப்போ ரெல்லாம் ஒரு 'கருத்தாக' வழிமொழியப்படுகிறது. மொக்கைகள் பல்கிப் பெருகுகின்றன.

சரத்குமார் அரசியலுக்கு வருவதற்கான நியாயத்தை எம்ஜியார் வழங்குவது போல, மொக்கை சமஸ்தானங்களுக்கான ஊக்கத் தையும் நம்பிக்கையையும் மேற்படி மொக்கை சக்கரவர்த்திகள் வழங் குகிறார்கள். 100 கோடி ரூபாய் பணத்தை ஷங்கரிடம் கொடுத்து பிரம் மாண்டமாய் படம் எடுக்கச் சொன்னால், 30 கோடிக்கு ஒரு கண்ணாடி மாளிகை கட்டி ரஜினியை ஆடவிட்டு, அடுத்த பிரம்மாண்டத்துக்கு ஃபேர் அண்டு லவ்லியைப் பிதுக்கச் சொல்கிறாரே, அது குலோப் ஜாமூன் மொக்கை மாதிரி இல்லை?

''சரக்கே இல்லையென்றாலும் ருசிகரமாக இருக்கிறது, அபத் தமாக இருந்தாலும் நகைச்சுவையாக இருக்கிறது, முட்டாள்தனமாக இருந்தாலும் விறுவிறுப்பாக இருக்கிறது'' என்று பலவகையான ரசனை நியாயங்கள் மொக்கைகளுக்கே ஒரு எழுத்து மோஸ்தர் என்னும் அந்தஸ்தை வழங்கி ஆசி கூறுகின்றன.

''கொசு அடிக்க குண்டாந்தடியா? இதற்கு இத்தனை ஆய்வு தேவையா?'' என்று பதிவர்கள் அலுப்படைய வேண்டாம். மொக் கைகள் கொசுவுக்கு நிகரானவை என்பதென்னவோ உண்மைதான். ஆனால் கொசுவின் வலிமையை அதன் தோற்றத்தை வைத்தா கணிக்க முடியும்? அது பரப்பும் தொற்று நோயல்லவா அதன் உண் மையான வலிமை.

குன்னக்குடி, லால்குடி போன்ற பல கில்லாடிகள் தம் ஆயுளையே பிடிலுக்கு அர்ப்பணித்திருந்தாலும், நீரோ மன்னன் வாசித்த பிடில் மட்டும்தான் உலக வரலாற்றில் இடம் பிடித்திருக் கிறது. காரணம், அவன் பிடில் வாசித்த மேடையின் பின்புலம். '' கூடிச் சோறு நிதம் தின்று, தினம் சின்னக்கதைகள் பல பேசி.. வாடிக் கிழப்பருவமுற்று விழுபவர்கள்'' எப்போதும் வேடிக்கை மனி தர்களாக மட்டுமே இருப்பதில்லை. பரந்து விரிந்து பிரம்மாண்ட மாகக் கிடக்கும் இந்த மெய் நிகர் உலகத்தை, கூச்சமோ அரு வெறுப்போ இல்லாமல் தமது சின்னக் கதைகளால் நிரப்பும்



படிப்பகம்

www.padippakam.com

மொக்கைகளை நீரோக்கள் என்றோ அற்பர்கள் என்றோ அழைப்பது மிகையா என்ன?

எப்போதும் சீரியஸாக 'உம்'மென்றோ, அனல் கக்கும்படியாகவோ, அழுது கண்கள் வீங்கியபடியோதான் எழுத வேண்டும், நகைச்சுவையும் எள்ளலும் கூடாதென்று நாங்கள் கூறவில்லை. சாப்ளினை விடவா? ஒலியே இல்லாத ஒரு கலை மொழியில் மார்க்ஸை மொழிபெயர்த்து உலகுக்கு வழங்கிய சாப்ளினுடைய நோக்கத்தில் நேர்மை இருந்ததனால்தான் அந்த நகைச்சுவையில் கூர்மை இருந்தது. சிரிப்பு எங்கே முடிகிறது, துயரம் எங்கே தொடங்குகிறது என்று பிரித்தறிய முடியாத வெளியை, எளிய மக்களின் வாழ்க்கையை, ரசிகனுக்கு அறிமுகப்படுத்தியது.

வாழ்க்கையை நேருக்கு நேர் சொந்தக் கண்ணால் பார்க்கும் ஆற்றலும் தைரியமும் இல்லாதவர்களிடமிருந்துதான் 'லாஃபங் கேஸ்' நகைச்சுவை உற்பத்தியாகிறது. மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் வாழ்க்கையின் கொடூரத்தை யாரால் உளப்பூர்வமாக வெறுக்க முடிகிறதோ, அவர்களிடமிருந்து உண்மையான நகைச்சுவையும் தோன்றுகிறது. தம்முடைய கீழ்மையை உணர்ந்து அச்சப்படுவது யாருக்கு கைவருகிறதோ அவர்களுக்கு மட்டுமே சுய எள்ளலுக்கான தைரியம் வருகிறது.

இவை இல்லாதவர்கள் அனைவரும் ஊடகங்களால் உருவாக்கப்பட்ட கருத்துலகின் ரீசைக்கிள்டு சரக்குகளாக இணையத்தில் குவிகிறார்கள். வணிகச் சினிமா, வணிகப் பத்திரிகை, வணிக அரசியல் ஆகியவற்றால் ஐம்புலன்களும் நிரப்பப்பட்டு, 'கழுகாரின் கண்கள், அரசுவின் நாவுகள், வம்பானந்தாவின் அறிவு, மிஸ்டர் மியாவின் தோல்' ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்ட மனிதர்கள் கருத்துச் சுதந்திரத்தைக் கைப்பற்றும்போது மொக்கைகளை மட்டுமே பிரசவிக்க முடியும்.

இதைப் பேசக்கூடாது, இதை எழுதக் கூடாது என்று குறிப்பான கருத்துகள் மீது ஆளும் வர்க்கங்கள் விதித்திருந்த தடையை எதிர்த்துப் போராடித்தான் மனித குலம் கருத்துச் சுதந்திரத்தைப் பெற்றிருக்கிறது. சின்னக் கதைகள் பேசி மகிழ்வோர் சுதந்திரமின்மையினால் என்றும் அவதிப்பட்டதில்லை. எனவே, சுதந்திரத்தின் மாண்பையும் அவர்கள் உணர்வதில்லை. அவர்களுடைய விசைப்பலகையின் எல்லா பட்டன்களும் எஸ்கேப் பட்டன்களே. பட்டன் ஒன்றுதான்



படிப்பகம்

www.padippakam.com

எனும்போது பதிவர்கள் எத்தனை ஆயிரமாய் இருந்தும் பய னென்ன?

பல்லாயிரம் பதிவர்களை இணையம் பெற்றெடுத்திருக்கும் இதே காலகட்டத்தில் தான் பல இலட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். கும்மிப் பதிவுகளைப் பொழியும் ஐ.டி உலகின்மீது பிங்க் ஸ்லிப்புகள் பொழிகின்றன. ரம்பாவின் தற்கொலை வதந்தியின் மீது பதிவர்களின் பார்வை முழுதும் பதிந்தி ருந்த அதே நாளில்தான், பெரம்பலூர் ஜோசப் கண் மருத்துவமனை ஏழைகளின் பார்வைகளை இலவசமாகப் பிடுங்கியது. சிங்கள இரா ணுவம் குண்டு மழை பொழியும் இதே நாளில்தான் இந்தியாவில் ரிலீஸ் ஆகிறார் ஜேம்ஸ்பாண்டு. பங்குச் சந்தையால் சூறையாடப் பட்ட அமெரிக்க மக்களின் தற்கொலைச் செய்திகளுக்கு அக்கம்பக் கமாக, அந்தப் பங்குச் சந்தையில் புத்திசாலித்தனமாகச் சூதாடுவ தற்குச் சொல்லித்தருகிறார்கள் அம்பிகள்.

ஆயிரம் பேர் ஆடுவதற்கு இடமளிக்கும் மேடை ஆயிரம் பேரையும் நடனக் கலைஞராக்கி விடுவதில்லை. தலைவர்கள் - மந் தைகள், மேதைகள் - பாமரர்கள் என்று பிரிந்து கிடக்கும் அவமா னமான நிலை முடிவுக்கு வருவதை இணையம் சாத்தியமாக்கியிருக் கிறது. ஆனால் அது அந்த சாத்தியத்தை மட்டுமே வழங்குகிறது.

நீரோ ஒரு மன்னன். அல்லது அவனைப் போல மேலும் சில மன் னர்கள். அவ்வளவு மட்டுமே அன்று சாத்தியம். ஏனெனில் அது மன் னராட்சிக்காலம். இன்று ஜனநாயகம். எல்லோரும் இந்நாட்டு மன்னர். எனினும் 'ரோம்' இன்னும் எரிந்து கொண்டுதானிருக்கிறது.

•••



படிப்பகம்

www.padippakam.com

## சோல்சனிட்சின்:
## 'அவலத்தில்' பிறந்த இலக்கிய அத்வானி!

சோல்சனிட்சின் இறந்துவிட்டார். ஸ்டாலின் எதிர்ப்பு, கம்யூனிச எதிர்ப்பு பனிப்போர் காலத்திய ரசிய வல்லரசு எதிர்ப்பு என்ற நோக்கங்களுக்காக அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் உலகம் முழுவதும் கடை விரிக்கப்பட்ட சோல்சனிட்சின் தனது 89-வது வயதில் ரசியாவில் மரணமடைந்தார். அமெரிக்கா மற்றும் மேற்குலக ஏகாதிபத்தியங்களைப் பொருத்தவரை அவர்களுக்கு சோல்சனிட்சினின் உடனடிப் பயன்பாடு 80-களின் இறுதியிலேயே முடிவுக்கு வரத் தொடங்கிவிட்டது.

'கம்யூனிசத்தின் முடிவு' கைக்கு எட்டியபின், 'அறம்' 'ஆன்மீகம்' போன்ற மாயக்கவர்ச்சி கொண்ட சொற்களின் மூலம் கம்யூனிச எதிர்ப்புக்கு உணர்ச்சி வேகமூட்டிய சோல்சனிட்சின், உலக முதலாளி வர்க்கத்துக்குத் தேவைப்படவில்லை. அறமின்மையை நியாயப்படுத்தும் 'சித்தாந்தங்களின் முடிவு' தான் இப்போது அவர்களுக்குத் தேவையாக இருந்தது. இந்தத் தேவையை நிறைவு செய்ய பின்நவீனத்துவம் அரங்கிற்கு வந்து விட்டது. இவ்வகையிலும் சோல்சனிட்சின் ஒப்பீட்டளவில் அவர்களுக்குக் காலாவதியாகி விட்டார்.

'சோசலிசம் என்பது கம்யூனிஸ்டு கட்சி அதிகார வர்க்கத்தின் ஆட்சியே' என்று முத்திரை குத்தி, கம்யூனிசத்தை அவதூறு செய்வதற்கு முதலாளித்துவத்திற்குப் பயன்பட்ட சோல்சனிட்சின் என்ற அந்த ஆயுதம், இன்று அதே அதிகாரவர்க்க உளவு நிறுவனத்தின்



படிப்பகம்

www.padippakam.com

முன்னாள் அதிகாரியான புடினின் திருக்கரத்தால் ஞானஸ்நானம் செய்து கொண்டு, புதிய ரசியாவின் புனிதச்சின்னமாகப் புத்து யிர்ப்பும் பெற்றிருக்கின்றது.

இவையெதுவும் சோல்சனிட்சின் ரசிகர்களான அறிவாளிக ளையும் எழுத்தாளர்களையும் கடுகளவேனும் பாதித்ததாகத் தெரிய வில்லை. ''நாஜிகளின் அடிமை முகாம்களுக்கு எந்த விதத்திலும் குறையாத முகாம்களை சோவியத் அரசு நடத்தியிருக்கின்றது. சோல்சனிட்சினின் கூற்றுப்படி இவற்றில் 6 கோடி முகாம்வாசிகள் வாட்டி வதைக்கப் பட்டிருக்கிறார்கள்'' என்று தனது அஞ்சலிக் கட்டுரையில் (காலச்சுவடு, செப்-2008) அசோகமித்திரன் குறிப் பிடுவது இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. சோல்சனிட்சின் பற்றிய இவர்களது கட்டுரைகள் அனைத்துமே அவரை 'ஸ்டாலின் காலக் கொடுங்கோன்மையின் தேவசாட்சியமாகவே' நினைவு கூர்கின்றன.

### அமெரிக்க அவதூறுகள் - அறிவாளிகளின் ராமர் பாலம்!

'ஸ்டாலின் ஆட்சியின் படுகொலைகள், வதை முகாம்கள் மற்றும் பட்டினிச் சாவுகள் குறித்த கட்டுரைகள் கம்யூனிசத்துக்கு எதிராக அமெரிக்காவும் மேற்குலகமும் நடத்திய ஆபாசமான பிரச் சாரப் போரின் அங்கமே' என்பது ஏற்கெனவே ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப் பட்டிருக்கின்றது. மேற்கூறிய இந்தப் பிரச்சார யுத் தத்தை முன்நின்று நடத்திய ரடால்ஃப் ஹெர்ஸ்ட், 24 செய்தி ஏடுக ளையும், 12 வானொலி நிலையங்களையும் கையில் வைத்திருந்த அமெரிக்க ஏகபோக முதலாளி. இவன் நாஜிகளின் நண்பன் என்ப துடன், 1934-இல் ஜெர்மனிக்கு சென்று இட்லரை சந்தித்துவிட்டு வந்த பின்னர், ரசியாவுக்கு எதிராக இட்லர் நடத்திய உளவியல் யுத் தத்தின் அங்கமாகவே இந்தப் பொய்ப்பிரச்சாரம் அவனால் நடத் தப்பட்டது என்பதையும் கனடா நாட்டுப் பத்திரிகையாளர் டக்ளஸ் டோட்டில் ஆதாரங்களுடன் மெய்ப்பித்தார். பின்னர், 'தி நேஷன்' எனும் அமெரிக்கப் பத்திரிக்கையும் இதனை உறுதி செய்தது.

இரண்டாம் உலகப்போரில் நாஜிகள் வீழ்த்தப்பட்ட பின், கம் யூனிச எதிர்ப்புப் புனிதப்போரை சி.ஐ.ஏ.வும் பிரிட்டிஷ் உளவு நிறு வனமும் தொடர்ந்தன. 'மாபெரும் பயங்கரம்', 'சோகத்தின் அறு வடை' என்ற நூல்களை எழுதிய ராபர்ட் கான்குவெஸ்ட் என்ற அமெரிக்க பேராசிரியன், பிரிட்டனின் கம்யூனிச எதிர்ப்பு உளவுப்



படிப்பகம்

www.padippakam.com

பிரிவின் அதிகாரியாக இருந்தவன். பின்னாளில் ரீகனின் தேர்தல் பிரச்சாரகனாக அதிகாரபூர்வமாகவும் நியமிக்கப்பட்டவன். இத்தகைய 'எழுத்தாளர்கள்' போட்டுக் காட்டிய கணக்கின்படி, ஸ்டாலின் கால ரசியாவில் கொல்லப்பட்டவர்கள் மற்றும் சிறைப் பட்டவர்களின் எண்ணிக்கை அந்நாட்டின் மக்கள் தொகையில் சரி பாதியை எட்டியது. இந்தக் கேலிக் கூத்துகள் எல்லாம் 1980-களில் ஆதாரப்பூர்வமாக அம்பலமாக்கப்பட்டன.

பிறகு, ரசிய கம்யூனிஸ்டு கட்சியின் ஆவணக்காப்பகத்தை கோர்ப்பசேவ் திறந்து விட்டார். படுகொலைகள் குறித்த புள்ளி விவரங்கள் அனைத்தும் ஊதிப் பெருக்கப்பட்ட பொய்கள் என தரவுகள் நிரூபித்தன. எனினும், இந்த உண்மைகள் எதனையும் அறிந்து கொள்ள சோல்சனிட்சின் ரசிகர்களான அறிவாளிகள் விரும்பவில்லை.

சென்ற நூற்றாண்டில் பிரபல அறிவாளிகளாகக் கொண்டாடப் பட்ட ஜார்ஜ் ஆர்வெல், ஸ்டீபென் ஸ்பென்டர், ஆர்தர் கீஸ்லர், ரஸ்ஸல் முதலானோர் கம்யூனிச எதிர்ப்பு நூல்களை எழுதுவதற்கா கவும், கம்யூனிச ஆதரவாளர்களைப் போலீசுக்குக் காட்டிக் கொடுப்பதற்காகவும் பிரிட்டிஷ் உளவுத்துறையிடம் சம்பளம் வாங்கினர் என்ற உண்மையும் 90 களின் இறுதியில் பிரிட்டிஷ் உளவுத்துறை ஆவணங்களின் வாயிலாகவே வெளிச்சத்துக்கு வந்தது. இதனைக் கேட்ட பிறகும் மேற்படி அறிவாளிகள் அவமா னத்தால் கூனிக் குறுகவில்லை. குறைந்தபட்சம் தாங்கள் வழி மொழிந்த ஸ்டாலின் காலப் படுகொலை புள்ளிவிவரங்களில், ''கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டு மூன்று நான்கு சைபர்களை அதிக மாகப் போட்டு விட்டோமா?'' என்ற அளவிற்குக் கூட தங்களது கூற்றுக்களை இவர்கள் மீளாய்வுக்கு உட்படுத்தவில்லை. மாறாக கீஸ்லர், ஸ்பென்டர் முதலானோரையே பக்திப் பரவசத்துடன் இன்றும் தமது எழுத்துக்களில் மேற்கோள் காட்டுகின்றார்கள்.

அரை உண்மைகளையும் முழுப் பொய்களையும் பிசைந்து வனையப்பட்ட இலக்கியங்களால் உண்மைகள் தோற்கடிக்கப்படு வதொன்றும் வியப்புக்குரிய நிகழ்வு அல்லவே! புவியியல், வர லாற்று ஆய்வு முடிவுகளையெல்லாம் புறங்கையால் ஒதுக்கி விட்டு, அமெரிக்காவில் குடியேறிய சனாதனியின் மனதை ஆக்கிர மித்திருக்கும் 'இராமன் பாலம்' போலவே, அறிவாளிகளின்



படிப்பகம்

www.padippakam.com

மனதை ஆட்கொண்டிருக்கின்றது 'கம்யூனிசக் கொடுங்கோன்மை' எனும் புனைவு. அந்த வகையில் பார்த்தால் சோல்சனிட்சின் இன்னும் சாகவில்லை. இந்த பக்தர்களின் இதயத்திற்குள் உறங்கிக் கொண்டிருக்கின்றார்.

சோல்சனிட்சின்:
சோசலிச எதிர்ப்பு ஆயுதத்தின் 'சோக'க் கதை!

இரண்டாம் உலகப்போரில் ஒரு ரசியப் படைப்பிரிவின் கமாண்டராகப் பணியாற்றிக் கொண்டிருந்த சோல்சனிட்சின், தனது நண்பனுக்கு எழுதிய கடிதத்தில், ஸ்டாலினைப் பற்றியும் சோவியத் அரசு போரை வழிநடத்தும் முறையைப் பற்றியும் விமரிசித்து எழுதியதற்காகவும் அவரது நாஜி ஆதரவுப்போக்குக்காகவும் 'சோவியத் எதிர்ப்புப் பிரச்சாரம் மற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்' என்று குற்றம் சாட்டப்பட்டு, 7 ஆண்டு சிறைத் தண்டனையும், 3 ஆண்டுகள் உள்நாட்டிலேயே நாடுகடத்தலும் விதிக்கப்பட்டு 1945-இல் உழைப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டார். உடலுழைப்புப் பணிகளில் சிறிது காலம் ஈடுபடுத்தப்பட்ட பின், பாதுகாப்புத் துறையால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூடத்துக்கு மாற்றப் பட்டார். உழைப்பு முகாமில் தண்டனைக்காலம் முடிந்தபின், அவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப் பட்டது. தாஷ்கண்ட் மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்பட்டு அவரது புற்றுநோய் கட்டுப்படுத்தப்பட்டது.

மேற்கூறிய பத்தாண்டு காலத்தில் அவர் 'இவான் டெனிசோவிச்சின் வாழ்வில் ஒரு நாள்', 'முதல் வட்டம்', 'கான்சர் வார்டு' என்ற மூன்று நாவல்களை எழுதினார். 1962-இல் குருச்சேவின் நேரடி ஆணையின் பேரில் 'இவான் டெனிசோவிச்சின் வாழ்வில் ஒருநாள்' என்ற நாவல் வெளியிடப்பட்டது. 'முதலாளித்துவ மீட்பு, ஸ்டாலின் மீதான அவதூறு' என்ற தனது அரசியல் நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வதற்காக குருச்சேவ் மேற்கொண்ட இந்த நடவடிக்கை, அமெரிக்கா நடத்தி வந்த ஸ்டாலின் எதிர்ப்பு - கம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரத்திற்கு வலுச்சேர்த்தன.

ஸ்டாலின் எதிர்ப்பு என்ற வரம்பைத் தாண்டி சோவியத் கொடுங்கோன்மை எந்திரத்தை வடிவமைத்தவர் லெனின்தான் என்றும், கம்யூனிசம் எனும் கொள்கையே கொடுங்கோன்மைதான் என்றும் சோல்சனிட்சினுடைய எழுத்துக்கள் விரியத் தொடங்கின.



படிப்பகம்

www.padippakam.com

எனவே, குருச்சேவைத் தொடர்ந்து வந்த போலிக்கம்யூனிஸ்டுத் தலைமையால் அவரது எழுத்துகளை வெளியிட இயலவில்லை. எனவே, மற்ற இரு நாவல்களும், அவற்றைத் தொடர்ந்து ரசியாவில் இருந்தபடியே சோல்சனிட்சின் எழுதிய 'குலக் தீவுக் கூட்டம்' என்ற நாவலும் 60 களில் மேற்குலகில்தான் வெளியிடப் பட்டன.

மென்மேலும் தீவிரமடைந்து கொண்டிருந்த அமெரிக்க - ரசிய முரண்பாடுகளின் பின்புலத்தில் 1970-இல் 'குலக் தீவுக்கூட்டம்' நாவலுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1971-இல் மேற்குலகில் பிரசுரிக்கப்பட்ட 'ஆகஸ்டு 1914' என்ற அவரது வரலாற்று நாவலிலும் கட்டுரைகளிலும், புரட்சிக்கு முந்தைய ஜார் ஆட்சிக்காலத்தை பொற்காலமாகச் சித்தரித்த துடன், ரசிய கிறித்தவ திருச்சபைமரபையும் புகழ்ந்து எழுதினார்.

1974-இல் ரசியாவிலிருந்து வெளியேற்றப்பட்ட சோல்சனிட்சின் 1994-இல் யெல்ட்சினின் வெற்றிக்குப் பின் ரசியா திரும்பினார். 1974 முதல் 2008 இல் அவர் இறக்கும் வரை அவர் 'பூரணமான சுதந்திர மனிதனாக'த் தான் இருந்தார். ஐரோப்பாவிலும் பின்னர் அமெரிக்காவிலும் இறுதியாக 'சுதந்திர' ரசியாவிலும் அவர் வெளியிட்ட கருத்துக்கள், அவரது சித்தாந்தக் கண்ணோட்டத்தையும், ஆளுமையையும் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவுவதோடு, 1974-க்கு முந்தைய அவரது படைப்புகள் மீதும் புதிய ஒளியைப் பாய்ச்சுகின்றன; அல்லது அவற்றை ஒரு முறையேனும் 'மறுவாசிப்பு' செய்யுமாறு அறிவாளிகளைக் கோருகின்றன. செய்வார்களா என்ன? 'தீ சுடும்' என்ற அறிவியல் உண்மை வறட்டுத்தனமென்றும், 'தீக்குள் விரலை வைத்து இன்பத்தைத் தீண்டும்' அழகியல் உண்மையே அறுதியானது என்றும் சாதிப்பவர்களன்றோ இலக்கியவாதிகள்!

## அவலத்திலிருந்து பிறந்த இலக்கிய அத்வானி!

உயிர்மை, செப்.2008 இதழில் சுகுமாரன் எழுதுகிறார்: ''இவான் டெனிசோவிச்சின் வாழ்வில் ஒரு நாள்' என்ற குறுநாவலுடன் இலக்கிய உலகுக்குள் நுழைந்தார் சோல்செனித்சின். டெனிசோவிச் என்ற பாத்திரம் கட்டாய உழைப்பு முகாமில் அனுபவிக்கும் ஒரு நாள் வாழ்க்கையின் வாயிலாகத் தனது எட்டாண்டு காலத் துயர ஜீவிதத்தைச் சித்தரித்துக் காட்டினார். சோசலிச



படிப்பகம்

www.padippakam.com

நிர்மாணம் என்ற இரும்புத் திரைக்குப் பின்னால் மனிதர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை நாவல் அம்பலப்படுத்தியது. நாவல் உருவாக்கக் காலத்தில் மார்க்சியம் மீதான நம்பிக்கையைத் துறந்தார். அவரது பின்னாள் வாழ்க்கையின் ஆதாரங்களாக மாறிய தத்துவத் தேடலும் கிறித்தவ விசுவாசங்களும் வலுவடைந்தன...''

இதன் பொருள் என்ன? அவர் தன்னுடைய 'துயரத்திலிருந்து' சமூகத்தின் துயரை உணர்ந்திருக்கிறார். தன்னுடைய அனுபவத்திலிருந்து, தான் கொண்டிருந்த கொள்கையையும் துறந்திருக்கின்றார்! சோல்சனிட்சினுக்கு வழங்கப்படும் இந்தக் கோட்பாட்டு நியாயத்தை நாம் அத்வானி அண்டு கம்பெனிக்கும் வழங்கலாமே! பிரிவினைக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட 'சிந்து மாகாணத்து இந்து' என்ற முறையில் அவரது இந்துத்துவ விசுவாசம் வலுவடைந்தது கூட நியாயம்தானே!

சமூக நிலைமைகளை ஆராய்ந்து அதன் அடிப்படையில் வகுக்கப்படும் கொள்கை, தனது தனிப்பட்ட நலனுக்கோ அனுபவத்துக்கோ எதிராக இருந்தபோதிலும் அந்தக் கொள்கையைப் பற்றி நிற்பவர்களே மனித சமூகத்தின் முன்மாதிரிகள் ஆக முடியும். ஒரு படைப்பாளி சமூகத்தின் துயரில் தன் துயரைக் காண வேண்டும். மாறாக, தன் சொந்தத் துயரத்தின் முன் உலகை மண்டியிடச் சொல்லும் சோல்சனிட்சினின் இந்த மனோபாவம் ஒரு அற்பவாதம். அரசியல் அரங்கில் இதன் அவதாரத்திற்குப் பெயர்தான் துரோகம்.

சோல்சனிட்சின் உருவான ரசியா - உலகின் முதல் பாட்டாளி வர்க்கப் புரட்சியைச் சாதித்த தேசம். 1917 முதல் பகைவர்களால் சூழப்பட்டு தன்னந்தனியாகப் போரிட்டு உயிர் பிழைத்த தேசம்; தன்னுடைய ஆயிரமாண்டு பின்தங்கிய நிலையைப் பத்தே ஆண்டுகளுக்குள் துடைத்தெறிந்து விட்டு தொழில்மயமாக வேண்டும் அல்லது அழிந்துபட வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்ட தேசம்; உடைமையை இழந்த வர்க்கங்கள் உவப்போடு இட்லருக்கு உதவக் காத்திருந்ததால் நண்பன் யார் பகைவன் யார் என்று இனம் காண முடியாமல் தவித்த தேசம்; முதல் சோசலிசநாட்டின் குரல்வளையை நெறிப்பதற்கு இட்லருக்கு ஆன உதவிகளையெல்லாம் செய்த நேசநாடுகளைச் சகித்துக் கொண்டு தன்னந்தனியாகப் போராடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட தேசம்; இத்தனைக்கும்



படிப்பகம்

www.padippakam.com

இடையில் உழைக்கும் வர்க்கத்தின் வாழ்வில் இதுவரை காணாத உயர்வைக் கொண்டு வந்த தேசம்..! இந்தச் சூழலில், இந்தத் தேசத் தில்தான் சோல்சனிட்சினின் இலக்கியம் பறக்கின்றது. அவரது நுண்ணோக்கி கண்டுபிடித்த மனித அவலத்தின் பின்புலம் இதுதான்.

உண்மை விளம்பியின் உள்மன அழுக்கு!

கம்யூனிச எதிர்ப்பாளர்கள் சோல்சனிட்சினைக் கொண்டா டும்போது, தமது கம்யூனிச வெறுப்பையும் இயல்பாக வெளிக் காட்டி விடுவதால் அவர்களது நடுநிலை தானே அம்பலமாகி விடு கின்றது. ஆனால் சோல்சனிட்சினை 'மார்க்சிய நோக்கில்' எடை போட்டு நியாயப்படுத்துகின்றார் எஸ்.வி. ராஜதுரை. (பார்க்க: 'ரசியப் புரட்சி: இலக்கியச் சாட்சியம்', 'சொல்லில் நனையும் காலம்' என்ற அவரது இரு நூல்கள்).

''சோல்சனிட்சின் சரியான கம்யூனிஸ்டோ இல்லையோ, அவரது கூற்றுகள் பல உண்மையானவை. படப்பிடிப்புகள் பல சரி யானவை. தேவையானவையும் கூட. கம்யூனிஸ்டுகளாகத் தங் களைத் தம்பட்டமடித்துக் கொள்பவர்களை விட இவரது எழுத்தில் அதிகமான சமுதாய உண்மை அடங்கியிருக்கிறது'' என்கிறார்.

சமுதாய உண்மை கிடக்கட்டும். முதலில் வெறும் உண்மை இருக்கின்றதா என்று பார்ப்போம். 'லெனின் கிராடு முற்றுகையில் பல இலட்சம் மக்கள் நாஜிகளால் கொல்லப்பட்டதற்கு, இட்லர் மட்டுமல்லாமல் ஸ்டாலினும்தான் காரணம்' என்று சோல்ச னிட்சின் குற்றம் சாட்டுவதை ராஜதுரையாலேயே சகிக்க முடிய வில்லை. ''இது அன்றைய வரலாற்று நிலைமைகளையும் பாசிச எதிர்ப்புப் போரில் ஸ்டாலினின் சிறப்பான பாத்திரத்தையும் மறப்ப தாகும்'' என்று குறிப்பிடுகின்றார்.

இது 'மறப்பது' குறித்த பிரச்சினையா, 'மறுப்பது' குறித்த பிரச் சினையா? ஆக்கிரமிப்பு வெறிபிடித்த ஒரு பாசிஸ்டையும், அந்த ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடிய தலைவனையும் சமமாக்கிக் குற்றம் சாட்டுவது 'மறதி'யில் சேரக்கூடிய விசயம் போலும்! சோல்சனிட்சினை இவ்வாறு எழுதத் தூண்டியவை இரண்டு கார ணிகளாகத்தான் இருக்க முடியும். ஒன்று, 'தானும் தன்னை ஒத்தவர் களும் அநியாயமாகச் சிறைப்படுத்தப்பட்டதால்' ஏற்பட்ட வன்ம உணர்ச்சி.



படிப்பகம்

www.padippakam.com

அல்லது கம்யூனிசத்தால் தான் எந்த வகையிலும் நேரடித் துன் பத்தை அனுபவிக்காத போதிலும், அதன்மீது கான்குவெஸ்ட் போன்றோர் கொண்டிருந்த 'இயல்பான' சித்தாந்தத் துவேசம்.

சோல்சனிட்சினின் மூளையில் இரண்டு காரணிகளுமே செயல் பட்டிருக்கின்றன. இந்த மூளைதான், சித்தாந்தக் கறைபடியாத தூய இலக்கியப் பெருவெளியில் மிதந்தபடி சமுதாய உண்மையை உமிழ்கின்றதாம்.

'அறம்' அறிவாளெடுத்த கதை!

சிறைப்பட்டிருந்த காலத்தில் 'அன்பு, அறம், அவலம்' என்பன போன்ற சூக்குமமான சொற்களின் வழியே அறிஞர் பெருமக்களின் மனதை உருக்கிய சோல்சனிட்சின், விடுதலை செய்யப்பட்ட பின், அதாவது 'உணர்ச்சித்தளை'யிலிருந்து விடுபட்டு, அவரது அறிவு 'சுதந்திரமாக' இயங்கும் சூழல் வாய்க்கப்பெற்ற பின், 'குண்டு, ரத்தம், கொலை' என்று பருண்மையான சொற்களில் நெருப்பைக் கக்குகின்றார். சோல்சனிட்சினைப் பற்றிப் புரிந்துகொள்ள வியத்நாம் போர் குறித்த அவரது கருத்தே போதுமானது.

வியத்நாம் மீது அமெரிக்கா நடத்திய ஆக்கிரமிப்பை, உலகப் போரில் வீசப்பட்ட குண்டுகளைக் காட்டிலும் அதிகமான குண் டுகளை வீசியும், ரசாயன ஆயுதங்களை அம்மக்கள் மீது பரிசோ தித்தும் மனிதகுலம் அதுவரை கண்டறியாத கொடிய யுத்த மொன்றை அமெரிக்கா நடத்தியது. கம்யூனிஸ்டுகள் தலைமையில் அந்நாட்டு மக்கள் நடத்திய தேசவிடுதலைப் போரை உலகமே ஒரு மித்த குரலில் ஆதரித்தது. போருக்கு எதிராக அமெரிக்க மக்களின் கலகமும் வெடித்தது.

வெறிகொண்ட அமெரிக்க பாசிஸ்டுகள் சிலரைத் தவிர வேறு யாரும் இந்த ஆக்கிரமிப்புப் போரை ஆதரிக்கவில்லை. சோல்ச னிட்சினோ ''அமெரிக்கா ஆண்மையை இழந்து விட்டது'' என்று கூறி வியத்நாமிலிருந்து பின்வாங்கியதற்காக அமெரிக்காவைக் கண்டித்தார். வியத்நாமில் சிக்கிய அமெரிக்கப் போர்க் கைதி களுக்கு 'கம்யூனிஸ்டுகள் இழைக்கும் கொடுமை'யை அமெரிக்கர் களுக்கே விளக்கி, 'ராம்போ சினிமா'க்களுக்கான திரைக்கதையை வழங்கினார்.



படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்க - ரசிய பனிப்போர் காலத்தில் போருக்கு எதி ராகச் சமாதானத்தைப் பிரச்சாரம் செய்த அறிவுஜீவிகளைத் 'துரோகிகள்' என்று சாடுகின்றார் சோல்சனிட்சின். ரசியாவைக் காட்டி அச்சுறுத்தி அமெரிக்கா அணு ஆயுதங்களை அதிகரிக்க வேண்டுமென வெறியூட்டுகின்றார். இந்தோனேசியாவில் கம்யூனிஸ்டுகள் படுகொலை செய்யப்பட்டதையும், கிரீஸின் பாசிச ஆட்சியையும் ஆதரிக்கின்றார். சோல்செனிட்சினின் பிற்போக்கு வெறியைப் பட்டியலிட்டு மாளாது.

முன்னர் சோசலிசத்தின் கதை!
பின்னர் சூழ்நிலையின் கைதி!!

இவற்றையெல்லாம் தனது நூலில் பட்டியலிட்டுக் கூறிவிட்டு, ''சோல்சனிட்சினின் உலகக் கண்ணோட்டம் குழம்பிப் போன ஒன்று. ஆனால் அது அவரது கசப்பான அனுபவங்களின் விளைவாகப் பிறந்த ஒரு கண்ணோட்டம்'' என்று இதற்கெல்லாம் நியாயம் சொல்கின்றார் ராஜதுரை. ஒரு படைப்பாளியைக் 'கசப்பான' அனுபவத்துக்கு ஆளாக்கினால் உலகத்துக்கு என்ன நேரிடும் என்பதை இதிலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டும் போலும்!

''ஜார் ஆட்சியில் தணிக்கை இல்லை, உளவுத் துறைக் கொடுமை அவ்வளவாக இல்லை, நாடு கடத்தல் இல்லை, உழைப்பு முகாம் இல்லை, ரசிய தேசிய இனம் பிற இனங்களை ஒடுக்கவில்லை; 1905, 1917 புரட்சிகளின் முன்னணியாளர்களில் யூத இனத்தவர் அளவுக்கு அதிகமாக இருந்தனர்'' என்பன போன்ற சோல்சனிட்சின் பொய்களை முதலாளித்துவ ஆய்வாளர்களே சங்கடத்துடன் பட்டியலிட்டுள்ளனர். ரசிய தேசவெறியும், யூத எதிர்ப்பு நாஜி ஆதரவுக் கண்ணோட்டமும் அவரிடம் நிலவியதையும் பலர் ஒப்புக் கொள்கின்றனர். இவையும் கூட அவரது கசப்பான அனுபவங்கள் தோற்றுவித்த கண்ணோட்டங்களோ?

ரசிய உளவுத்துறையை எதிர்த்து இலக்கியத்தில் சண்டமாருதம் செய்துவிட்டு 2007-இல் புடின் கையால் தேசியவிருது வாங்கிய சோல்சனிட்சினிடம், ''ஒரு முன்னாள் கே.ஜி.பி அதிகாரியான புடின்,'' ரசிய அதிபர் ஆகியிருப்பது பற்றிக் கருத்துக் கேட்டார்கள் பத்திரிக்கையாளர்கள். ''புடின் கே.ஜி.பி.யில் உளவு பார்க்கும் அதிகாரியாகத்தான் இருந்தாரே தவிர, விசாரணை அதிகாரியாக இல்லை. முன்னாள் சி.ஐ.ஏ தலைவர் சீனியர் புஷ் அமெரிக்க



படிப்பகம்

www.padippakam.com

ஜனாதிபதி ஆகவில்லையா?'' என்று கொஞ்சம் கூடக் கூச்சமில்லாமல் நியாயப்படுத்தினார் சோல்சனிட்சின்.

'சோசலிசக் கொடுங்கோன்மையை எதிர்த்து நின்ற சுதந்திரத்தின் ஒளிவிளக்கு', சுதந்திரம் கிடைத்தவுடன் ஏன் பாசிசத் தீவட்டியாக உருமாறியது? ஏனெனில், இது உருமாற்றமல்ல; தீவட்டிதான் ஒளிவிளக்காகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றது என்பதே உண்மை.

### கொலைக் கண்ணாடியும் நிலைக் கண்ணாடியும்!

எனினும் இலக்கியவாதிகள் இதனை ஒப்பமாட்டார்கள். ஒரு படைப்பாளியின் ஆளுமையை அவரது படைப்பின் வழியாகத்தான் மதிப்பீடு செய்ய வேண்டுமேயன்றி அவர் கொண்டிருக்கும் அரசியல் கண்ணோட்டத்திலிருந்து அல்ல என்பது அவர்களது கருத்து. ஒரு படைப்பாளியின் சமூக ஆளுமையும் படைப்பு ஆளுமையும் இருவேறு காற்றுப்புகாத பெட்டிகள் போலும்!

ஒரு கலைஞன் தன்னுடைய சித்தாந்தத் தற்சாய்வுகளுக்கு அப்பாற்பட்டு, கலையில் தோய்ந்து நிலைக்கண்ணாடி போல சமூக உண்மையைப் பிரதிபலிக்க முடியும் என்பதற்கு, டால்ஸ்டாயை உதாரணம் காட்டுகின்றார்கள் இலக்கியவாதிகள். நிலப்பிரபுத்துவக் கொடுங்கோன்மையின் கீழும் முதலாளித்துவச் சுரண்டலின் கீழும் மூச்சுத் திணறிக் கொண்டிருந்த ரசிய சமூகத்தையும், அதன் விவசாய வர்க்கத்தின் வாழ்க்கையையும் மனநிலையையும் பிரதிபலித்தார் டால்ஸ்டாய். கிறித்தவ சோசலிசம் எனும் சித்தாந்தம் டால்ஸ்டாயின் படைப்பூக்கத்திற்கு உந்துவிசையாக இருக்கவில்லை.

சோல்சனிட்சின் அத்தகையதொரு நிலைக்கண்ணாடி என்று ராஜதுரையாலேயே சொல்ல இயலவில்லை. ''அவர் நிலைக் கண்ணாடி அல்ல, முப்பட்டைக் கண்ணாடி. அதில் ஊடுருவிச் சிதையும் ஒளிக்கற்றைகளைக் கொண்டு அவ்வொளியின் (அதாவது ஸ்டாலின் கால ரசியாவின்) தன்மையை அறிய முயல்கிறோம்'' என்கிறார் ராஜதுரை. ஆயின், கண்ணாடியின் பரிமாணத்தை எடை போடாமல், ஒளியின் தன்மையை எப்படி மதிப்பிட முடியும்? தனது சித்தாந்தக் கனபரிமாணம் பற்றி அந்த முப்



படிப்பகம்

www.padippakam.com

பட்டைக் கண்ணாடியே வாக்குமூலம் கொடுத்தாலும் அதனைப் புறக்கணிக்க வேண்டும் என்று கூறுவதன் நோக்கம் என்ன?

'ஆத்திரத்தில் அவன் தன்னை மீறிச் சென்றுவிட்டான்' என்று சோல்சனிட்சினின் கதாபாத்திரம் பேசும் ஒரு வசனத்தை மேற்கோள் காட்டி, அது சோல்சனிட்சினுக்கும் பொருந்தும் என்கிறார் ராஜதுரை. இவ்வாறு சோல்சனிட்சின் தன் வாயால் எப்போதுமே ஒப்புக் கொண்டதில்லை என்பது மிகவும் முக்கியமானது. 'தன்னை மீறிச் செல்லுதல்'! அடேயப்பா, அறம் வழுவித் தப்புவதற்குத் தோதான பொந்துகளை வார்த்தைகளால் உருவாக்கும் வல்லமையில் வழக்குரைஞர்களை விஞ்சுகிறார்களே இலக்கியவாதிகள்!

என்ன செய்வது! கோபமும் துயரமும் கொப்பளிக்கும் தருணங்கள்தான் ஒரு மனிதனின் தணிக்கை செய்யப்படாத ஆளுமையை அறியத்தருகின்றன என்று நாம் கருதிக் கொண்டிருக்கின்றோம்.

தூக்குத் தண்டனையைத் தவிர்ப்பதற்காக வைஸ்ராய்க்கு கருணை மனு எழுதிய தந்தையைக் கண்டித்த பகத்சிங்கின் நடவடிக்கையும், பகத்சிங்கை தூக்கிலிடுவதற்கு வைஸ்ராயிடம் தந்திரமாக ஒப்புதல் அளித்த காந்தியின் நடவடிக்கையும், அவர்கள் 'தன்னை மீறிச் சென்ற' நடவடிக்கைகளா, அல்லது அவர்களது ஆளுமையின் செறிவான வெளிப்பாடுகளா?

அவ்வாறு மீறிச் செல்லாத 'தான்' (சோல்சனிட்சினின் அகம்) யார் என்பதை எதை வைத்துக் கண்டுபிடிப்பது? ஒரு மனிதன் தன்னைப்பற்றித் தானே கூறிக்கொள்ளும் கருத்துக்களிலிருந்து அல்லாமல், அவனுடைய செயல்களிலிருந்தும், சமூகம் அவனைப் பற்றிக் கூறும் கருத்துக்களிலிருந்தும் அவனை மதிப்பிடுவதா, அல்லது சம்பந்தப்பட்ட மனிதர்கள் தம்மைப் பற்றி எழுதி வைத்திருக்கும் தன்வரலாற்று நூலிலிருந்தோ, தன்னையும் பாத்திரமாக்கி அவர்கள் உருவாக்கும் புனைவுகளிலிருந்தோ அவர்களின் ஆளுமையை மதிப்பிடுவதா? காந்தியை மதிப்பிட வேண்டுமானால், அவருடைய செயல்பாடுகளையும், அவரைப்பற்றி அம்பேத்கரும், பகத்சிங்கும், இன்ன பிறரும் கூறிய கருத்துக்களைத் தூர வீசிவிட்டு 'சத்திய சோதனை'யில் மூழ்க வேண்டும் போலும்!

இருப்பினும் உண்மையைத் தவிர வேறொன்றையும் பேசத் தெரியாத அரிச்சந்திரர்கள் (அல்லது சோல்சனிட்சின்கள்) கூட,



படிப்பகம்

www.padippakam.com

தம்முடைய சொந்த முகத்தை நிலைக்கண்ணாடி மூலம் 'அறிய' விரும்பும்போது, லேசாகப் பவுடர் பூசி, தலையைச் சீவிக் கொள்வதில்லையா? இந்த அழகியல் 'உண்மை'யையாவது இலக்கியவாதிகள் ஒப்புக் கொள்வார்களா?

## இராமாயணத்தைப் புறக்கணித்துவிட்டு ராமர் பாலத்தை ஆய்வு செய்தது ஏன்?

சோல்சனிட்சின் குறித்த இந்தக் கட்டுரையில் ஸ்டாலினின் தவறுகள் பற்றிப் பரிசீலிக்கப்படவில்லை என்பதாலும் சோல்சனிட்சினை அவரது நாவல்கள் வழியாக மதிப்பீடு செய்யவில்லை என்பதாலும், 'நிச்சயமாக இது நடுநிலை தவறிய ஆய்வுதான்' என்று சோல்சனிட்சின் அபிமானிகள் அமைதி கொள்ளலாம். சோல்சனிட்சினை மதிப்பீடு செய்வது போன்ற பாவனையில் ஸ்டாலினையும் கம்யூனிசத்தையும் மதிப்பீடு (அவதூறு) செய்வது என்ற அழுகுணி ஆட்ட விதியை வேண்டுமென்றேதான் நிராகரித்திருக்கின்றோம்.

தோழர் ஸ்டாலினின் தவறுகள் எனப்படுபவை, 'சோசலிசத்தில் வர்க்கப் போராட்டம்' என்கின்ற, மனிதகுலம் இதுவரை கண்டிராத புதியதொரு வரலாற்றுச் சூழலில் நிகழ்ந்த தவறுகள். அவற்றை மீளாய்வு செய்வதும் மதிப்பீடு செய்வதும் பாட்டாளி வர்க்கத்தின் கடமை. அது முற்றிலும் வேறொரு தளத்தில் நடத்தப்பட வேண்டிய ஆய்வு. சமூக மாற்றத்துக்காக மக்களைத் திரட்டும் பணியில் யார் ஈடுபட்டிருக்கின்றார்களோ, அவர்களால் மட்டுமே அகச்சாய்வுகள் இன்றி இந்த ஆய்வில் ஈடுபட முடியும்.

கட்டின வீட்டுக்குப் பழுது சொல்லும் 'உரிமை' கொத்தனாருக்கு மட்டுமே உரித்தானது என்று நாம் கூறவில்லை. சீர் செய்யும் நோக்கில் பழுதை ஆய்வு செய்யும் 'அறிவு' பழுது சொல்லும் எல்லோருக்கும் இருப்பதில்லை என்பதையே சுட்டிக் காட்டுகின்றோம். இது அறிவுக்கும் நடைமுறைக்கும் இடையிலான மார்க்சிய உறவு.

'கம்யூனிஸ்டு கட்சி ஜனநாயகமில்லாத சிறை, அதன் தலைவர்கள் அதிகார போதை கொண்ட மூடர்கள், உறுப்பினர்கள் சொரணையற்ற மந்தைகள்' என்பதே அநேகமாக அறிவாளிகள் மற்றும் இலக்கியவாதிகள் கொண்டிருக்கும் கருத்து. சோசலிசத்தை ஒரு



படிப்பகம்

www.padippakam.com

உன்னதமான அறம் என்று இவர்கள் கொண்டாடினாலும், அறம் வழுவாத ஒரு கட்சியை அவர்களே உருவாக்கிக் கொள்ளலாமென்றாலும், தங்களது ஜனநாயக உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, அவர்கள் தன்னடக்கத்துடன் அந்தப் பொறுப்பை நிராகரித்து விடுகிறார்கள். தங்களது மன உணர்வை வீரியப்படுத்தி தங்களுக்கே வழங்கிய காரணத்தால் அவர்கள் சோல்சனிட்சினை மோகிக்கிறார்கள். அவ்வளவுதான்.

ஆயின், சோல்சனிட்சின் யார்? அவரது சொல்லும் செயலும் ரசியாவில் பிறக்க நேர்ந்த ஆர்.எஸ்.எஸ் காரர் என்பதையே காட்டுகின்றன. அவரது ரசிய தேசவெறி, பழமை குறித்த ஏக்கம், அழிந்துவிட்ட ஜாராட்சி குறித்த அனுதாபம், நாஜி ஆதரவு, கம்யூனிச எதிர்ப்பு வெறி, ஏகாதிபத்தியக் கைக்கூலித்தனம், கிறித்தவப் பிற்போக்கும் போலி அறவுணர்வும் கலந்த ஒழுக்கவாத ஆன்மீகம் அனைத்தும் அவரை அந்தமானில் சிறை வைக்கப்பட்ட சாவர்க்கராகவே அடையாளம் காட்டுகின்றன. ஆர்.எஸ்.எஸ் இதயங்களுக்கு அவலமே நேராது, அதிலிருந்து இலக்கியமும் பிறக்காது என்று நாம் கருதவில்லை.

•••

குறிப்பு: 21 ம் நூற்றாண்டிலும் இவான் டெனிசோவிச் ஜீவித்திருந்தார். எனினும் அபுகிரைப், குவான்டனமோ சிறைகளில் அவர் அடைக்கப்படாததால், 21 ம் நூற்றாண்டின் மானுடச் சிக்கல் குறித்து தனது குரலைப் பதிவுசெய்யும் வாய்ப்பு அவருக்கு மறுக்கப்பட்டுவிட்டது. ஆகவே, அவரைப் பின்தொடர்ந்து எதிரொலித்திருக்கக் கூடிய குரல்களும் நெறிக்கப்பட்டுவிட்டன.

•••



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

சிறு பத்திரிகை உலகம் என்று அறியப்படும் இலக்கியவாதிகளின் உலகம் சில்லறைச் சச்சரவுகளாலும் குழாயடிச் சண்டைகளாலும்தான் தன்னை உயிர்ப்புடன் பராமரித்துக் கொள்கிறது. சும்மாவே சொறிந்து சுகம் காண்பவன் கையில் விசிறிக் காம்பு கிடைத்ததைப் போல இத்தகைய இலக்கியவாதிகளுக்கு இப்போது இணையம் கிடைத்திருக்கிறது. முன்பெல்லாம் டீக்கடைகளிலும், மதுக்கடைகளிலும், இலக்கியக் கூட்டங்களிலும் மட்டுமே நடைபெற்று வந்த வாய்க்கலப்புகளும் கைகலப்புகளும் இப்போது இணையத்துக்கும் இடம் பெயர்ந்திருக்கின்றன. அந்த வகையில் வினவு தளத்தில் இலக்கிய அற்பவாதிகளை அடையாளம் காட்டும் வகையில் வெளியான கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.

புதிய
கலாச்சாரம்

ரூ.25

படிப்பகம்